சத்திய வேத

# பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

> **எழுத்தாளர் கவனத்திற்கு!**
>
> காவலன் பரிசுத்தவாரச் சிறப்பிதழுக்கான கவிதைகள், கதைகள், கட்டுரைகளை வரவேற்கிறோம். அனுப்புவோர் பங்குனித்திங்கள் 10-ம் தேதிக்கு முன்பதாக எமது அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.
>
> — ஆசிரியர்

95-ம் புத். | 1970-ம் ஆண்டு மாசி மாதம் 28-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 8-ம் இல.

## விரத்தத்துவ வாக்குத்தத்தம்

### குருமார் வருடந்தோறும் புதுப்பிப்பர்

குருமாரின் விரத்தத்துவ சட்டம் தளரவிடப்படமாட்டாது என்று சென்ற வாரம் பரிசுத்த தந்தை பல சந்தர்ப்பங்களிலும் கூறியிருந்ததன்பின் உலக மேற்றிராணிமாருக்கு அனுப்பியிருந்த சென்ற வார நிருபத்தில் குருமார் ஒவ்வொருவருடமும் விரத்தத்துவ வாக்குத்தத்தத்தைப் புதுப்பிக்கவேண்டுமென்றும் கட்டளை பண்ணியிருக்கிறார். குருமார் விவகாரத்துக்கென வத்திக்கானில் நிறுவப்பட்டிருக்கும் ஸ்தாபனத்தின் தலைவர் கருதினால் றயிற் அடிகளாரின் மூலம் இக்கட்டளை விதிக்கப்பட்டிருக்கின்றது. இந்த வாக்குத்தத்தம் பெரிய வாரத்தில் ஒவ்வொரு குருவானவரும் செய்துகொள்ளும்படி பணிக்கப் பட்டிருக்கின்றனர்.

## மெல்பேர்ன் நகர

### சற்பிரசாத மகாநாடு

1973-ம் ஆண்டில் அவுஸ்திரேலியாக்கண்ட மெல்போன்நகரில் நடக்க இருக்கும் சற்பிரசாத மகாநாடு வறுமையைப் பிரதிபிம்பிக்கும் மகாநாடாக இருக்குமென அந்நகர அதிமேற்றிராணியாராகிய றெபெட் நொக்ஸ் அடிகளார் அண்மையில் அறிவித்திருக்கின்றார். நொக்ஸ் அடிகளார் மூன்றுவருடங்களின்முன் இலங்கை இந்திய பிரதேசங்களில் பாப்பரசரின் ஸ்தானிகராக மதிப்புக்குரிய தொண்டாற்றியதை நேயர்கள் அறிவர். மேலும், மெல்போர்ன்நகர சற்பிரசாத மகாநாட்டுக்குப் பரிசுத்ததந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் விஜயம் செய்யலாமெனவும், போகும்வழியில் இலங்கையில் சிலநேரம் தங்கிப்போகலாமெனவும் வதந்திகள் இருப்பதையும் முந்திய பிரதிகளில் 'காவலன்' அறிவித்திருக்கின்றது.

## எமது நாட்டின் பிரதான தேவை

"இன்று மனிதனின் பிரதான தேவை பொருள் உற்பத்தியாகவே இருக்கின்றது. உணவுப்பொருளும் மறு உபயோகப் பொருள்களும் மிக அவ்சியமாகத் தேவைப்படுகின்றன. ஆகவே பொருள்களை உற்பத்திசெய்ய மக்களுக்குச் சிறந்த முறைகள் கற்பிக்கப்பட வேண்டும்" இவ்வாறு இந்தியதேச பூனா நகரிலே நுண்கலைக் கல்லூரித்தலைவராகிய யேசுசபைக் குருவானவர் ஜே. பி. தியல் சுவாமியார் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக் கொழும்பு நிலையத்தில் நடந்த ஆலோசனைச் கூட்டத்திலே அண்மையில் எடுத்துக் கூறினார். இந்தியா பொருள் உற்பத்தியில் மிகவும் முன்னேறியிருக்கிறதென்றும், அந்நாட்டவர்களின் அனுபவத்தையும் அறிவையும், அயல்நாடாகிய இலங்கையுடன் பகிர்ந்து கொள்ள அங்குள்ள அறிஞர்பின்னிற்கமாட்டார்களெனவும்சுவாமியார் உறுதியளித்தார்.

திருச்சபை முறைகளின் மாற்றங்களைப்

## பிறசமயத்தவர்கள் மெச்சுகின்றனர்

சிலவருடகாலமாகக் கத்தோலிக்க திருச்சபையின் முறைகளில் தோன்றிவருகின்ற மாற்றங்கள் பிறசமயத்தவர்கள் மத்தியில் பெரும் மதிப்பை அளித்திருக்கின்றன என்ற கருத்துப்பட யாழ்ப்பாணத்தில் வெளிவரும் "உதய தாரகை" என்னும் பத்திரிகை ஆசிரியர் வரைந்திருக்கின்றார். பல நூற்றுக்கணக்கான வருடங்களாக அனுசரிக்கப்பட்ட முறைகளைத் தயக்கமின்றி அண்மையில்கத்தோலிக்க சமயம் மாற்றியுள்ளது. மாற்றங்கள் எல்லாவற்றுள்ளும் திருவழிபாட்டுப் பாஷை லத்தீனிலிருந்து பிரதேசபாஷையாக மாற்றப்பட்டதை ஆசிரியர் பெரிதும் மெச்சுகிறார்.

## பாப்பரசரின் தூதர் ஸ்ரெரேறு அடிகளார்

# அதிமேற்றிராணியாரானார்

இலங்கையிலே பாப்பரசரின் ஸ்தானிகராகக் கடமையாற்றிவரும் அதிவந்தனைக்குரிய லூசியானோ ஸ்ரெரேறு அடிகளார், அண்மையில் வத்திக்கான் சென்று அங்கே அதிமேற்றிராணியாராக அபிஷேகம் செய்யப்பட்டு மீளவும் நமது மத்தியில்வந்து சேர்ந்துவிட்டார். அவர் திரும்பிவந்துசேர்ந்த அன்றுதினம் இலங்கை மேற்றிராணிமார் சகலரும் அவரைக் கட்டுநாயக விமான நிலையத்தில் வரவேற்றுத் தமதுமரியாதையைச் செலுத்திக்கொண்டனர். அவரது மேற்றிராணித்துவ அபிஷேகம் விசுவாசப் பரப்புதல் சபைக்கல்லூரித் தேவாலயத்தில், வத்திக்கானில், இலங்கைக் குருமாணவர் பலர் சமுகத்தில் நடைபெற்றது. அன்றைய சமயம் விசேஷஉரையாற்றிய கருதினால் விலோ அடிகளார் இலங்கைமேல் ஸ்ரெரேறு அடிகளாரின்மூலம் தேவன் தமது அனுக்கிரகத்தை அளித்தருளவேண்டுமென நல்லாசி கூறினார்.

## ஓர் அரிய நூல்

கொழும்பு கொட்டாஞ்சேனை நல்லாயர் கன்னியர் உயர் பாடசாலை அதிபர் சங். வின்பார் தாயார் இக்கால யுவதிகளுக்கு அவசியம் தேவையான ஒரு நூல் தயாரித்து வருகின்றார். அந்நூலில் வருங்காலத்தில் சுமார் 10 வருடம் உட்பட இந்நாட்டில் படித்த இளம் பெண்களுக்கு இருக்கும் வேலை வாய்ப்பு விபரங்கள் யாவும் அறிந்து கொள்ளலாம், இந்நூல் இரண்டொரு மாதங்களில் ஆங்கிலத்திலும் வெளிவருமென எதிர் பார்க்கப்படுகின்றது. வேண்டிய விபரங்களைப் பெற்றுக்கொள்ளத் தனக்கு உதவுமாறு தாயார் அவர்கள் அரசாங்க ஸ்தாபனங்களுக்கும் தனியார் ஸ்தாபனங்களுக்கும் விண்ணப்பித்திருக்கின்றார். நமது நாட்டில் வேலைவாய்ப்பு விஷயங்களைப் பற்றித் தொழில் இலாகா உதவியுடன் நமது கல்வி இலாகா சிறிது முயற்சி எடுத்துவந்தது. உண்மையேயெனினும் அம்முயற்சிகள் பெரும்பலன் அளிக்க

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## பயபிருத் துறவிகள்

# நாடு அகற்றப்பட்ட மர்மம்

நைஜீரியப் பெரும் பிரதேசத்திலிருந்து பிரிந்து போகப் போராடித் தோல்வியுற்றிருக்கும் பயபிருவிலுள்ள கத்தோலிக்க துறவிகளிற் பெரும்பாலோரை நைஜீரிய அரசாங்கம் அரச துரோகிகள் என்ற மனப்பான்மையுடன் அவர்கள்மேல் நடவடிக்கைகள் எடுத்து வருவது பெரும் விந்தையாக இருக்கின்றது. பயபிருவைவிட நைஜீரியாவிலுள்ள மறுபிரதேசங்களில் கத்தோலிக்க துறவிகளின் நிலைமை இப்படியாக இல்லை — அப்படியாயின் பயபிருவிலுள்ள துறவிகள் யாது குற்றம் தான் செய்துவிட்டார்களோ? அண்மையில் நாடு துரத்தப்பட்ட அயர்லாந்து தேச தூய ஆவியானவர் சபையைச் சேர்ந்த துறவிகள் றோமாபுரி, அயர்லாந்துதேசம் சேர்ந்ததும் உண்மையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் யாது அரசியற் குற்றமும் செய்யவில்லை. நைஜீரியாவுக்கு எதிராகப் போராடிப் பசி பட்டினி, பிணி துன்பங்களை அனுபவித்த பயபிரு மக்களுக்கு அனுதாபங் காட்டியதை நைஜீரிய அரசாங்கம் அரசியற் துரோகம் என மதித்துக் கொண்டு இத்துறவிகளை நாடு கடத்திவருகின்றது. இப்பிழையான அபிப்பிராயம் விரைவில் மறைந்துவிடுமெனவும் துரத்தப்பட்ட துறவிகள் மீளவும் அழைக்கப்படுவரெனவும் பரிசுத்த தந்தை எதிர் பார்க்கின்றார்.

சிறுபான்மையினரை அலட்சியஞ்செய்வது

## மனிதாபிமான முறையன்று

தேசிய அரசாங்கத்தின் மந்திரிமாரில் எதிர்க்கட்சியினரின் கண்ணியத்தையும் மதிப்பையும் பெற்றவர் மிகச்சிலரே. அத்தகைய சிலரில் ஸ்தலவிவகாரமந்திரி பிரேமதாசா தலைசிறந்தவர். அண்மையில் அவர் தன்மனதில் பதிந்த பல உண்மைகளையும் வெளிவிட்டிருக்கிறார். சென்றவாரம் அவர் கொழும்புமாநகரில் ஒரு கூட்டத்தில் பேசும்பொழுது சிறுபான்மையினரை கௌரவத்தோடு பெரும்பான்மையினர் நடத்திவரவேண்டுமென்று வலியுறுத்தினார். அதற்கு அவர் கொடுத்த காரணம் பின்வருமாறு: தான்விரும்பிய முறையில் ஒருவன் பிறப்பதாயின், பெரும்பான்மையினரில் ஒருவராகவும், செல்வந்தராகவும், குறைவற்றவராகவும், பிறப்பர். அப்படிப்பிறவாது சிறுபான்மையினரில் ஒருவராகவோ, வறியவராகவோ, குறைபாடுற்றவராகவோ, பிறப்பராயின், மனிதாபிமான முறையில் நடத்திவரப்பட அவருக்கு உரிமையுண்டு என அவர் தர்க்கரீதியாக எடுத்துக்காட்டினார்.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பூர்வீக கிறீஸ்தவர்கள்

எழுதியவர்: மறைத்திரு. சைமன் கிறகோரி பெரோர, யே. ச.
தமிழில் தருபவர்: நெடுந்தீவு, ம. மரியதாசன்

(முன் தொடர்ச்சி)

'தப்ரபேன்' என்பது இலங்கைதானு என்ற சந்தேகம எழலாம். உண்மையில் இலங்கை தப்ரபேன் என்று அழைக்கப்பட்டு வந்தது. ஆனுல், தப்ரபேன் என்பது எப்பொழுதும இலங்கையையே குறிக்கிறது என்பதை நிலைநாட்டுவதற்கு யாருக்கேனும் தைரியமுண்டா? இதனை உறுதிப்படுத்துவதற்காகவே மிகவும் ஐயத்திற்கிடமான முறையில் இப்பெயர் பாவிக்கப்பட்டு வந்திருக்கிறது. இது இலங்கைக்குரிய பெயர்தான என்று அடிக்கடி கருதப்பட்டும் வந்திருக்கிறது. இதுபற்றிக் கூறப்பட்ட வியாக்கியானங்கள் சுமத்திரா தீவுக்கும் பொருந்தக் கூடியனவாக இருக்கின்றன. இந்த வியாக்கியானங்களுக்குரிய தீவை அந்த நாட்களில எவருமே அறிந்திருக்கவில்லை. வெறுமனே ஒரு பெயரைச் சூட்டியதும், அதனை அறியவேண்டுமென்ற ஆசையினுல் பலபேரும் பல வழியாகச் சிந்திக்கத் தொடங்கினர். தப்ரபேன் என்பது செங்கடலிலுள்ள தீவாகவும் இருக்கலாமென்ற கூற்றுமுண்டு. இக்கூற்றைப் புழுகுவீரான சேர் ஜோண் மண்டிவிலி என்பவர் உறுதிப்படுத்தியுள்ளார். இவர் ஒரு திருட்டெழுத்தாளராவர். இவர், 'வோஜாஜ் அண்ட் றவிலி' என்ற புத்தகத்தை எழுதியிருக்கிறுர். இந்நூல் "உலகம் முன்னெப்பொழுதுமே கேட்டிராத பொய்களை உள்ளடக்கியுள்ளது." இவர் கூறுவதாவது: "திரு. பிறிஸ்டி ஜோண் அவர்களுடைய பிரதேசத்தில் கிழக்குப் பாகத்தில் பெரியதொரு தீவு இருக்கிறது. இது தப்ரபேன் என்று அழைக்கப்படுகிறது. இது மிகவும மேன்மையானதாகவும், செழிப்பாகவும் இருக்கிறது. நல்ல செல்வந்தரொருவர் இத்தீவின் இராசாவாக இருக்கிறுர். இவர் திரு. பிறிஸ்டி ஜோணுடைய தயவில் வாழ்கிறுர். மக்கள், தேர்தல் மூலம் தங்கள் இராசாவைத் தெரிவுசெய்கின்றனர். இத்தீவில் வருடத்தில் இரண்டு கோடைகாலமும் இரண்டு மாரிகாலமும் உண்டு. இங்குள்ள மக்கள் வருடத்திற்கிரு தடவை தங்கள் வயல்களை அறுவடை செய்கின்றனர். எல்லாக் காலங்களிலும் வயல்கள் செழிப்பாகவிருக்கும். இங்கு கணிசமான அளவு மக்கள் வாழ்கின்றனர். அவர்களில் அநேகர் கிறீஸ்தவர்கள். மக்கள் மிகுந்த செல்வந்தர்களாய் இருக்கிறபடியினுல் தங்கள் தெய்வங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்பதுபற்றி இவர்களுக்குத் தெரிவதில்லை. முற்காலத்தில் திரு. பிறிஸ்டி ஜோணுடைய பிரதேசத்திலிருந்து இந்தத் தீவுக்குப் பிரயாணம் செய்பவர்கள் கப்பல்மார்க்கமாகச் செல்லவேண்டுமென்று சட்டம் இயற்றப்பட்டது. இருபத்திமூன்று நாட்கள் அல்லது அதற்கதிகமான பிரயாணம் செய்தவர்கள், தற்போது ஏழு நாட்களில் பிரயாணம் செய்கின்றனர். கடல் மிக ஆழமற்றதாய் இருப்பதால் அதனடிப்பாகம் கண்ணுக்குத் தென்படக் கூடியதாகவும இருக்கிறது."

திரு. பிறிஸ்டி ஜோண் கூறுவதைப்போல, பிறவரும் கூற்றும் கட்டுக்கதையாக விருக்கின்ற படியினுல், தப்ரபேன் என்பது வேறேதாவதாகவுமிருக்கலாம். அல்லது அப்படியொன்று இல்லாததாகவுமிருக்கலாம. உண்மையான தீவுகளையோ அல்லது கற்பனையிலுதித்தவற்றையோ 'தப்ரபேன்' என்று அழைக்கப்படுவதையிட்டு ஆச்சரியப் படுவதற்கில்லை. இலங்கைக்கு மட்டும் 'லங்கா' என்றபெயர் கொடுக்கப்படவில்லை. திரு. ரெனன்ட் அவர்களின் அவசரஆராய்ச்சியை நோக்குமிடத்து, இந்திய வானசாஸ்திரிகள் கூறும் முதலாவது கிரகம் கடந்து சென்ற 'லங்கா' என்றதீவு இலங்கையாக இருக்கமாட்டாதெனவும், கிரகம் என்பதைப் போன்று தீவெனச் சொல்லப்பட்டதும் கற்பனையே என்றும் தெரியவருகின்றது. கணக்கிடும் நோக்கத்தோடு இந்திய வான சாஸ்திரிகள் பூமத்தியரேகையில்ஒருதீவிருப்பதாகக் கற்பனை செய்து அதற்கு 'லங்கா' என்றும் பெயரிட்டனர்.

ஆனுல் திரு. கவுட்டோ அவர்கள் கூறுவதைப்பற்றி சற்றுச் சிந்திப்போம். இவர் அந்தப்புர மேற்பார்வையாளர் சம்பந்தமான கதையைக்கேட்டு மிகவும் அதிருப்தியடைந்து பின்வருமாறு கூறுகின்றுர்: "அந்தப்புர மேற்பார்வையாளர், தனது சொந்தநாடான அபிசீனியாவைவிட்டு வேறெந்த நாட்டிற்கும் சென்றதாக எவ்விதமான குறிப்புகளும் இல்லாதிருக்கையில், இந்த அறிஞர் (டொறத்தியஸ்) எங்கிருந்து இக்கதையை எடுத்திருக்கிறுரென்பது எமக்கு மர்மமாகவே இருக்கின்றது. நாம் இந்தியாமுழுவதும் சுற்றித்திரிந்து அநேகமான படித்த சோனகர்களையும், பிறமதத்தவர்களையும் மற்றும் யூதர்களையும் அவர்கள் மத்தியிலுள்ள அநேக முதியவர்களையும் சந்தித்து விரிவாக விசாரணைசெய்தோம். ஆனுல் அந்தப் புர மேற்பார்வையாளரைப் பற்றிய கதைகளைப்பற்றி இவர்களுக்கு எதுவுமே தெரியாது."

இதுவரைக்கும் சரியான பாதையில் சென்றுகொண்டிருந்த திரு. கவுட்டோ, திடீரென அதைவிட்டுவிலகி இவ்விடயத்தின் முக்கியத்துவத்தைஉணர்த்துவதன் பொருட்டு ஒரு கிறீஸ்தவ புனிதரொருவரை உதவிக்கழைக்கின்றுர். இது நமக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கின்றது. சிவனொளி பாதமலையிலுள்ள [illegible] கள் அப்போஸ்தல[illegible] தோமையாருடையதென இவர் கூறுகின்றுர். "அந்தக் காலத்தில் அப்போஸ்தலரான இந்தப் புனிதரைத் தவிர்ந்த வேறெவருமே இந்தியாவுக்குப் போகவில்லை" என்பதே இவர் கூறும் காரணமாகும்.

இவ்வாறு வேறொரு கர்ணபரம்பரைக் கதையுமுருவாகியிருக்கின்றது. இதுபற்றி திரு. யோவான் றிபெய்றியோ கூறுவதாவது: "இந்தத் தீவில் புனித சீஷியம் சீவித்த புத்தரைத் தமது கடவுளாகச் சிங்களமக்கள் வழிபடுகின்றனர். அவர் வந்த தினத்திலிருந்து தொடங்கும் பங்குனிமாத அமாவாசைத்தினத்திலிருந்து 'அவுறுத்' எனப்படும் தங்கள் வருடங்களைக் கணக்கிடுகின்றனர். புனித தோமையார் இந்தத் தீவில் சீவித்திருக்கின்றுர் என அநேகர் ஊகிக்கின்றனர். அவர் சோழமண்டலக் கரைக்கு வந்து சுவிசேஷம்போதித்தபடியினுற்றுன் அங்கே நாம், கிறீஸ்தவர்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இரட்சகரின் வருகையிலிருந்து 40ஆண்டுகள் சென்றபின்னரே இது நடந்திருக்கிறதென்பதை நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது. புத்தர் இத்தீவில் பிறக்கவில்லையென்றும் அவர் இங்கு மாணிக்காமல் இதன் எதிர்க்கரைக்குச் சென்றுரென்றும் அநேகர் கூறுகின்றனர். இக்கதை சந்தேகத்திற்கிடமானதாய் இருக்கின்றபடியினுல், இது திரு. றிபெய்றியோ அவர்களின் சொந்தக் கதையாகவே கருதப்படுகின்றது. "மக்களின் கர்ணபரம்பரைக்கதையை மட்டுமே என்னுல் கூறமுடியும். ஆனுல் இதிலுள்ள உண்மைகளை ஆண்டவன் தான் அறிவார்" என்று இவரே கூறுகின்றுர். புனித தோமையார் இலங்கைக்கு வந்திருக்கக்கூடுமென்பதைத் திரு. கவுட்டோ, திரு. றிபெய்றியோ ஆகிய இருவர் மட்டுமே எழுதிவைத்தனரெனச் சொல்லமுடியாது. புனித தோமையார் இந்தியாவில் கிறீஸ்துவின் நற்செய்தியைப் பரப்பினுரென லத்தீன், கிரேக்க, சீரிய திருமறைச் சரித்திரங்களிலும் எழுதப்பட்டிருக்கின்றது. இவர்காலத்துக் கல்வெட்டுகளும், நாணயங்களும் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறதென இந்தியமன்னரொருவர் திருமறைச் சரித்திரத்தில கூறுகின்றுர். இவ்விடயம் இதுவரைக்கும் சரித்திரவரலாற்றல் இடம்பெறவில்லை. ஆனுல் எதிர்பாராத விதமாக இவைகள் கர்ணபரம்பரைக் கதைகளுக்கு வலுவூட்டுகின்றன. கி. பி. 3-ம் நூற்றுண்டு வரைக்கும் இந்தியாவைச் சேர்ந்த மலபார் மாகாணத்தில் கிறீஸ்தவர்கள் பரவியிருந்தமைக்கு புனித தோமையாரே முக்கிய காரணமென அவர்களது கர்ணபரம்பரைக் கதையி[illegible] அப்போஸ்தலரான புனித தோமையாரின் பெயர் மாத்திரமே குறிப்பிடப்பட்டிருக்கின்றபடியினுல் அவர் இலங்கைக்கும்வந்திருக்கக்கூடுமென்பதையும்இலங்கையோடு தொடர்புபட்டிருந்த இந்தியாவின கிழக்கு-மேற்குக் கரையோரப் பகுதிகளிலும் இவர் தொண்டாற்றினர் என்பதையும் எவருமே மறுக்கமுடியாது. ஆனுல் றியெய்றியா இதனை மிகைப்படுத்தி, "புனித தோமையார் இத்தீவில் சீவித்தாரென எல்லோரும் உறுதியாகக் கூறுகின்றனர்" எனக் குறிப்பிடுகின்றுர் திரு. கவுட்டோ கூறும் காரணத்தையும், திரு. றிபெய்றியோ குறிப்பிடும் கணிப்பையும்போன்ற மிக உயர்ந்த கற்பனைக் கதைகள் புனித தோமையாரைச் சிவனொளிபாத மலையுடன் தொடர்புபடுத்துகின்றன. புனித தோமையார் இலங்கைக்கு வந்திருக்கலாமென்றுகூறுவதற்கு எவ்வித அவசியமுமில்லை.

இந்த நாட்டைப் பார்க்க வந்தவர்கள் இங்குள்ள மக்களைக் கிறீஸ்தவர்களாக மாற்றினுர்களென எழுத்தாளர்களெவருமே குறிப்பிடவில்லை. இப்படிப்பட்டவர்கள் மதமாற்றம் செய்தனரென்று சொன்னுல், அது அப்போஸ்தலிக்க பணியில் ஈடுபட்டவர்களுக்கு இழுக்காகவே இருக்கும். முன்னொரு காலத்தில் கிறீஸ்தவர்களிருந்தனரெனக் கூறியிருந்தால், கர்ணபரம்பரைக் கதைகளுக்கு நேர்விரோதமான உண்மைகளையே கூறியிருப்பர். 6ஆம் நூற்றுண்டில் இலங்கையில் கிறீஸ்தவர்கள் இருந்தனரென திரு. கொஸ்மாஸ் இண்டிக்கோபிளஸ்ாஸ் கூறுகிறுர். இவரது கூற்று உண்மையானதெனக் கொள்வதற்குத் தகுந்த காரணமும் உண்டு தேசாந்திரியான குருவானவரொருவரால் எழுதப்பட்ட 'கிறீஸ்தவ ஆராய்ச்சி'

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# சாம்பல் காட்டும் வழி

மந்திரிக்கப்பட்ட சாம்பலை நெற்றியில் பூசும் சடங்குடன் ஆரம்பமானது தபசுகாலம். சாம்பல் அல்லது (சாம்பர்) என்று வாயால் கூறிவிட்டால போதுமா? அதன் உயர் குணத்தையும் மகிமையையும் அறிந்தால மட்டுமே ஏன் அதைச் சமயச்சடங்கில் உபயோகிக்க வந்தது என்ற உண்மை புலப்படும்.

சாம்பல் பொருள்கள் தீயில் எரிவதனுல்உண்டாவது. ஆதித் திருச்சபையில் சாம்பல் தரித்தே தவம்புரிந்தனர். "சாம்பலைப்பூசி சாக்குத் துணியை அணிந்து நமது உடையை மாற்றிக்கொள்வோம்; விரதமாயிருந்து ஆண்டவருடைய சமுகத்தில் அழுது பிரலாபிப்போம்" (யோவேல் 2 : 13)

பல பொருள்களாயிருந்தவை சுட்டெரிக்கப்பட்டதனுல எல்லாம் ஒன்றுகிச் சாம்பலாயின. ஒன்றிப்பை உணர்த்தவும் சாம்பல் உதவுகிறது. இவை எரிவதனுல் பிரகாசம் சூடு என்பன உண்டாகிறது. இறைவனுக்கும் எமக்கும் உள்ள ஒன்றிப்பு இத்தகையதாகவே இருக்கவேண்டும். நாம் ஒளியாகவும் திகழவேண்டும். நீங்கள் பூமியின ஒளியாய் இருக்கிறீர்கள். இவை எல்லாவற்றையும இந்தச் சாம்பல் நமக்கு எடுத்துரைக்கிறது.

எலலாம் சேர்ந்து பற்றி எரியும்போது உண்டாகும்வேதனை நாம் எண்ணிப் பார்க்கவேமுடியாதது. எல்லாம் ஒன்றுகி அடுத்ததையும் பற்றித் தன்மயமாக்கிச் சாம்பலை உருவாக்குகிறது. நம் வாழ்க்கையில் ஏற்படும துன்ப துரிதங்களை நமனதுடன் ஏற்கவேண்டுமென நமக்கு ஒரு படிப்பினை. பல வர்ணப் பொருட்கள் எல்லாம் சேர்ந்து எரிந்தால் சாம்பலும் பலவர்ணமாயிருப்பதில்லை. ஒரே நிறந்தான். இனினும் அதன மிருதுவான மென்மை என்பனவும எம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய பல படிப்பினைகளைக் கொண்டுள்ளன.

இதனைத் தினமும் நெற்றியில தரிக்கும் வழக்கத்தை ஒரு சமயத்தைச் சார்ந்த மக்கள் கொண்டுள்ளனர். எனவே சாம்பல் எமது சமயத்தில் மட்டுமல்ல ஏனைய சமயங்களிலும் சடங்குகளில் உபயோகிக்கப்படுகிறது.

மனிதன் இறந்தபின் அவனை எரித்துச் சாம்பலை எடுத்துச் சமயமுறைப்படி சில சடங்குகளைச் செய்வதை இன்றும் நாம் காணலாம். பயிர்களுக்கும் நல்ல பசளையாகிறது. இது ஒரு கிருமிநாசினியாகவும் பயன்படுகிறது. ஒற்றடம் கொடுக்கவும மற்றும் பல சரீர நோய்களுக்கும மருந்தாகப் பயன்படுகிறது சாம்பல். இத்தகைய அரிய குணங்களைக் கொண்டமையால்தான இது சமய வழிபாட்டிலும் ஓர் இடத்தைப் பிடித்துள்ளது.

இறுதியாக எமது கடைசி முடிவை நினைவூட்டும் சின்னமாகவும் விளங்குகிறது. மனிதா! நீ சாம்பலாய் இருக்கிறுய், திரும்பவும் சாம்பலாய்ப் போவாய்; இதை நினைவில்வைத்துக்கொள். தபசுகால ஆரம்பத்தில் எமது நெற்றியிலும் சாம்பலைத் தரித்துத் திருச்சபை வருடாவருடம் எமக்கு இதை ஞாபகப்படுத்துகிறது.

எனவே இச் சாம்பலைப் போன்று எம்வாழ்க்கை அமையுமானுல எமது வாழ்வில் தூய்மை தலைதூக்கும்; ஒன்றிப்பு நன்றே வளரும்; கரடுமுரடான உலகசீவியம் அகல, மிருதுவான ஞானச் சீவியம் மலரும் புண்ணியங்களை வளர்க்கப் பசளையாக உதவும். ஈற்றில் மனிதனே நீ சாம்பலாய் இருக்கிறுய். மீண்டும் சாம்பலாய்ப் போவாய் என்ற எமது சரீர அழிவை எமக்கு விபூதித்திருநாளில்மட்டுமல்ல எப்போதும் நினைவூட்டிக் கொண்டிருப்பதால் எமது வாழ்க்கையைப் புண்ணிய வழியில் நடாத்த உதவுகிறது. புண்ணிய வாழ்க்கை எமது வாழ்க்கையின் முடிவில் நீதியின கிரீடமான மோட்ச பரிசைப் பெற்றுத்தர வழியாயிருக்கும். இதுவே எமது தபசுகால சிந்தனையுமாயிருக்கட்டும்.

— இ. பேர்னுட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் குடிசை

**பத்துப் பிள்ளைகளை மொத்தமாக அள்ளிக்கொடுத்த ஆண்டவன் மரியசீலியிடம் கொடிய வறுமையையும் சேர்த்துக் கொடுத்துவிட்டான்.**

**வேறு சுமையொன்றும் அவளுக்காகக் காத்திருந்தது. அந்தச் சுமையையும் அவளாகத்தான் ஏற்க முன்வந்தாள். ……… ஏன்?**

சுவாமி தேவநேசன் சாய்வு நாற்காலியில் அமர்ந்துகொண்டார். பழுதடைந்த தன் பழையகாரைப் பழுதுபார்த்துவிட்டமகிழ்ச்சி அவர்முகத்தில் பிரதிபலித்தது. கூடமாட ஏதோ உதவிசெய்துவிட்டகளைப்பில் எதிரேயிருந்த நாற்காலியில் நானும் அமர்ந்துகொண்டேன். பகல்இரவுஎன்று பாராது அவரது முயற்சியையும் உழைப்பையும் கண்டு என் வாலிப உள்ளமே அதிர்ந்துபோயிற்று. இரவு 11மணி தூக்கம்வேறு என் கண்களை இருட்டிக்கொண்டு வந்தது. ஆயினும் அவர் விடுவதாய் இல்லை. என் பெற்றோர், சோதரர், உழைப்பு போன்ற பல விடயங்களைப்பற்றியெல்லாம் வினவிக்கொண்டே போனார்.

"படார்…" என்ற சப்தம் எம்மைத் திடுக்கிடவைத்தது. அதிர்ந்துபோய்த் திரும்பினோம். சிறுவன் ரவிதான் தூங்கி வாங்கிலிருந்து கீழே விழுந்துவிட்டான், நாம் பேசிக்கொண்டிருந்ததில் அவனும் தூங்கப் போகாமல் விழித்துக்கொண்டிருந்தபடியால் அவனுக்கு இந்தநிலை ஏற்பட்டுவிட்டது.

"ரவி! நீ இன்னும் படுக்கப் போகவில்லையா?"

ரவி நித்திரைத் தூக்கத்துடன் கள்ளமில்லாத சிரிப்பொன்றை உதிர்த்தான்.

"சரி, நீ போய்ப் படு; புத்தியில்லாத பெடியனாய் இருக்கிறானே" இப்படி அவர் கூறும் பொழுதே அந்தச் சிறுவன்மேல் அவர் கொண்டுள்ள தனிவாஞ்சையை என்னால் உணரமுடிந்தது.

"நேரமாகிவிட்டது; நாங்களும் போய் படுத்துக்கொள்ளலாம்." சுவாமியார் தன்னுடைய அறைக்குள் சென்று கதவை மூடிக்கொண்டார்.

"அண்ணன்! திருந்ாதி அடிக்கேக்க எழுப்பிவிடுங்க; காலம பூசைக்கு உதவ வேணும்." ரவி — அந்தச் சிறுவனைப் பார்க்கும்போது, சுவாமியார் அவனைப்பற்றி என்னிடம் அறிமுகப்படுத்தியது என் நெஞ்சில் நீங்காத இடம்பெற்று விட்டது.

"சின்னப்பையன்; வயதும் கொஞ்சம். எதையும் தானே செய்யவேண்டும் என்ற ஆசை"…

"ரொஸ் பாதர்; ரவியைப் பார்த்தாலே தெரியுது."

"மொத்தம் பத்துப் பிள்ளைகள்; இவன் எட்டாவது பிள்ளை; இவனுக்குக் கீழே இன்னும் இரண்டு குழந்தைகள் …"

"ஏன் பாதர்! வளர்ந்த பிள்ளைகள் இருக்கிறார்களா?"

"மூத்த பையனுக்குப் 14 வயது இருக்கும். ஏதோ காரச்சில் வேலை பழகுறான். நாலைந்து பெண்பிள்ளைகள் வேறு இருக்கிறார்கள்."

கடவுள் பிள்ளைச் செல்வத்தை அள்ளிக்கொடுத்துவிட்டு வறுமையையும் சேர்த்துக் கொடுத்து விட்டாரே! ஒரு தடவை ரவியின் முகத்தைப் பார்த்துக் கொள்கிறேன். அந்தச் சிறுவன் அமைதியாகத் தூங்குகிறான். அவன் சின்ன முகத்தில் அந்த ஏழைத் தாயின் புன்னகைமுகம் நிழலுருவாகத் தெரிகிறது.

"இவ்வளவு வறுமைக்குள்ளேயும் புருஷனுக்கும் பெண்சாதிக்குமிடையில் எந்தவித மானகவலையோ சலசலப்போ மருந்துக்கும் கிடையாது. பெண்சாதி எதைக் கொடுத்தாலும், சொன்னாலும் புருஷனுக்குச் சரி; புருஷன் எதை உழைத்துக் கொடுத்தாலும் பெண்சாதிக்குச் சரிதான். இரண்டுபேரும் சேர்ந்து பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டுதான் ஞாயிறு பூசைக்கு வருவார்கள். வறுமையிலும நல்ல பயபக்தியான குடும்பம்"

"பாதர், ரவிக்கு நீங்கள் ஏதாவது சம்பளம் மாதிரிக் கொடுக்கிறீர்களா."

"நோ, நோ சம்பளம்என்ற சொல்லே எடுக்கக்கூடாது. அதிலயும் ரவியட தாய் மரியசீலி என்ன சொன்னு தெரியுமா? … சுவாமி, ரவியை உங்களுக்கு உதவியாத்தான் விட்டிட்டுப் போறன்; பக்கத்திலதான் பள்ளிக்கூடமும். உங்களோட இருந்து உங்களுக்கு கூடமாட உதவிகளைச் செய்யட்டும்; கடவுளுக்குச் சித்தமெண்டால் அவனும் உங்களைப்போல வந்தால் …"

"ரவியின் முகத்திலேயே தாயின் கருணையைப் பார்க்கலாம் போலிருக்கே பாதர்."

"மாதம்மாதம் கோயிலுக்காக நெல்லோ அரிசியோ கொஞ்சமாவது முந்திக் கொண்டுவருவதும்அவங்கதான்."

ஏழையின் வாழ்விலேதான் மகிழ்ச்சிபொங்கும் என்பதை நிரூபிக்கத்தானோ என்னவோ கிறீஸ்து ஏழையாகப் பிறந்தார். அப்படியாயின், அவர் ஏழையின் இல்லத்தில் தான் வாழ்கின்றாரா?

இப்படியே சிந்தனையில் உருண்டுகொண்டிருந்தேன். நடு இரவு கழிந்துவிட்ட நேரம். திடீரென கோவில்வளவினுள் ஒரு கார் வந்து போகும் சப்தம் என் காதுகளில் தெட்டத் தெளிவாய் விழுகிறது. இந்நேரம் யார் வருகிறார்கள்? யாருக்கும் அவஸ்தையாயிருக்குமோ? ஆனால், வந்ததும் கார் திரும்பிவிட்டதே!…சிந்தனையில உழன்றவண்ணமே தூங்கிவிட்டேன். கண்விழித்தபோது சிறுவன் ரவியைப் படுக்கையில் காணவில்லை. கடிகாரத்தைப் பார்த்தேன்; ஏழு மணி ஆகிவிட்டது. அப்பாடா! இப்படித் தூங்கிவிட்டேனே; பூசை காணவில்லையென்று சுவாமியார் குறைப்பட்டுக்கொள்ளப்போகிறாரென்று பயந்தபடியே அவசரம் அவசரமாக காலைக்கடன்களை முடித்துக்கொண்டு புறப்பட்டு நான் வெளியே வரவும், பூசை முடிந்து மக்கள் திரும்பவும் சரியாக இருந்தது. கோவில் முகப்பின் கதவோரத்தில் ஒரு சிறு கூட்டம் சூழ்ந்து நின்று யாரிடம் எதையோ கேட்பதும், தமக்குள்ளே பேசுவதுமாய் இருந்தார்கள். அவர்கள் முகத்தில் அனுதாபச் சாயல் பிரதிபலித்தது. சிறிதுநேரத்தில் சுவாமியாரும் அவ்விடம் வந்துவிட்டார். இனிமேல் நானும் ஏன் தாமதிக்கவேண்டும்? சுவாமியாரைக் கண்டதும் கூட்டம் விலகிக்கொண்டது. அங்கே கூட்டத்தின் நடுவே ஒரு கிழவி. அதுவும் கண் தெரியாத குருட்டுக் கிழவி. அந்தக் கிழவியின் தோற்றம், உடை எல்லாம் அவள் ஒரு நடுத்தரமான குடும்பத்தில் இருந்துதான் வந்திருக்கிறாள் என்பதை அப்பட்டமாக நிரூபித்தது. அப்படியானால் இரவு அந்தக் கார் சுமந்து வந்தது…!

— ம. அ. அரியநாயகம் —

"என்ன ஆச்சி, யாரோட வந்தநீ?"

"உதார்பிள்ளைகேக்கிறது?"

"அது சுவாமியாச்சி."

"சுவாமியாரா? ஐயோ, சுவாமி! அதை ஏன் கேக்கிறீங்க; நான் பெத்த பிள்ளை ………" நெஞ்சைப் பிளந்துவிடும் துயரொலியாய் வெளிவந்தது அவள் வார்த்தை.

"இடத்தைச் சொல்லு; நான் கூட்டிக்கொண்டுபோய் விட்டிட்டு கவனமாப் பாக்கச்சொல்லிப்போட்டு வாறன்."

"வேண்டாம்ராசா; அங்க ஒருத்தி இருக்கிறாள், எனக்கு வந்த மருமகள்; நாய் பூனையோட போய்ச் சீவிச்சாலும் சீவிக்கலாம்; அவளோட சீவிக்க ஏலாது."

கண் தெரியாத தன் மாமிக்கு அந்த மருமகள் செய்த அரிய சேவையின் விளைவுதான் இது என்று அனைவருக்கும் புரிந்துவிட்டது.

சுவாமியார் சிரித்துக்கொண்டே கேட்டார்: "மகனும் உன்னைக் கவனிக்கிறதில்லையா ஆச்சி?"

"என்னைக் கொண்டுபோய் கிழவி மடத்தில விடடாப்பா எண்டு கேட்டன்; தனக்கு அது மதிப்பில்லையாம்; அவனையும், அவன்ரை பொஞ்சாதியையும் ஊரார் குறை சொல்லுவினமாம் எண்டு கடத்திப்போட்டான் சுவாமி. அங்கினேக்க ஆசைக்கருமையா சீனி முறுக்கு வாங்கித் தா பிள்ளை எண்டு கேப்பன்; அது அவனுக்குப் பொறுக்காது. அவளின்ரை பேச்சைக் கேட்டு … எனக்கு … நான் பெத்தபிள்ளை…நேத்து … அடிச்சுக்கூடப் போட்டான் சுவாமி."

தொடர்ந்த முதிர்ந்த உதடுகள் வார்த்தைகளை வெளிக் கொண்டு வரவில்லை. குருட்டுக் கண்கள்தான் கலங்கிக் கண்ணீரைச் சொரிந்து கூடியிருந்த அனைவரது உள்ளங்களையும் உடைத்துவிட்டது. பத்திரிகை நிருபர்கள் மாதிரிப் பல மாதிரியாகவும் கேட்டு அந்த ஆச்சியின் இருப்பிடத்தை அறிந்துவிடலாம் என்று சுவாமியாரும் மற்றவர்களும்முயன்றுபார்த்தனர். வெறும் கண்ணீரைத்தான் பதிலாகத் தந்தாளே தவிர, தன் மகனையும் மருமகளையும் அவள் காட்டிக் கொடுக்கவில்லை.

"சுவாமி, நான் பெத்து வளத்த கடமைக்கு உபகாரமா என் பிள்ளை இந்தக் கண் தெரியாத பாவிக்கு அடிச்சிட்டான்; இனி அவனோடை எனக்கென்ன சீவியம்? ராவோட ராவாய் எங்கேயாவது கோயில் குளத்தில கொண்டுபோய் விடடா எண்டு நானுத்தான் சொன்னன். இங்க கொண்டுவந்து விட்டிட்டான்; அவன் நல்லாய் இருக்கட்டும்."

"சரி, நீ கவலைப்படாதை; இரண்டு நாள் பொறுத்துக் கொள்; கிழவர் மடத்து மதருக்குக் கடிதம்போட்டு அங்க கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகிறன், சிஸ்டர்மார் கவனமாக உன்னைப் பார்ப்பார்கள், இந்த ஆச்சியை இரண்டு நாளைக்கு நீங்களும் கொஞ்சம் கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கோ" என்று கூடியிருந்தவர்களுக்கும் இரண்டு வார்த்தை கூறிவிட்டுச் சுவாமியார் தன்னுடைய கார் நிற்பாட்டும் இடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்.

சாயந்தரம் சுவாமியாரும் நானும் அவருடைய அறையினுள் ஓர் புதிய நாடகத்திற்கான பின் இசையை ஒலிப்பதிவு செய்துகொண்டிருந்தோம். இப்படியான வேலைகள் என்றால் சிறுவன் ரவிக்கு நிரம்பப் பிடிக்கும். எங்களைச் சுற்றியே நின்றுகொண்டிருப்பான். ஆனால், அவனைக் காணாதது எனக்குப் பெரும் ஆச்சரியமாய் இருந்தது.

"சுவாமி!" யாரோ ஒரு பெண்குரல்.

சுவாமியார் என்னைத் தொடர்ந்து பதிவுசெய்யும்படி கூறிவிட்டு, குரலுக்குரியவரைக் காணச் சென்றுவிட்டார்.

"யார்! மரியசீலியா? ரவியைப் பார்த்துப் போகவா?"

அப்படியானால் வந்திருப்பவர் ரவியின் அன்னை மரியசீலி. பத்துப் பிள்ளைகளின் ஏழைத்தாய். அவர்கள் சம்பாசனை என் காதுகளிலும் தெளிவாய் விழுகிறது.

"இல்லையுங்க சுவாமி; மத்தியானம் ரவி வீட்டுக்கே வந்திட்டான்."

"அங்கேயா வந்திட்டான்! ஏன், என்ன நடந்தது?"

"அவன்வந்துதான் சுவாமி அந்த ஆச்சியைப் பற்றிச் சொன்னான்."

"……………………"

"பாவம்! அந்த ஆச்சியின்ரை மேலில தண்ணிபட்டு கன நாள் போல இருக்கு."

"ம் … மனிசி பெத்த பிள்ளை அப்படியாய் போயிற்று."

"சுவாமி! நீங்க ஒண்டும் நினைக்கக்கூடாது; மாட்டேன் எண்டும் சொல்லக்கூடாது …"

"எதுக்காக, என்ன விஷயம்?"

"நானே அந்த ஆச்சியை என் வீட்டுக்குக் கொண்டு போய் வைச்சுப் பார்க்கலாம் எண்டு நினைச்சுத்தான் வந்தனான். அவரும் சம்மதிச்சிட்டாருங்க சுவாமி."

"மரியசீலி, நீயே பத்துப் பிள்ளைகளோட கஷ்டப்படுகிறாய்; அதோட…"

"சுவாமி, நான் சின்னவளாய் இருக்கும்போதே அம்மா செத்திட்டா; தாயின்ரை அருமை தெரியாமல் தான் வளர்ந்தனான். பெத்த தாய்க்கு, அதுவும் அவங்கட வயதுபோன காலத்தில அன்போட கவனிச்சால் அது பெரிய பாக்கியம். கடவுளும் அவங்களை ஆசீர்வதிப்பார். அப்பிடி ஒரு பாக்கியம் கிடைக்க கடவுளை மண்டாட வேணும் எண்டு ஞானம் சுவாமி பிரசங்கத்தில சொன்னது எனக்கு இன்னும் நினைவாயிருக்கு. ஏதோ பத்தோட பதினொண்டாய் காச்சிறதில கிள்ளிக் குடுத்து அந்த ஆச்சியைக் கவனமாப் பாத்துக்கொள்ளுவேன்.

சுவாமியார் மௌனமாகிவிட்டார். அவர் எதை எண்ணி அமைதியாய் இருந்தாரோ தெரியவில்லை. கிறிஸ்தவ அன்பின் பிரதிபலிப்பாய் எழுந்த அந்த ஏழைத்தாயின் குரல் என்காதுகளில்விழுந்து என்னை உணர்விழக்கச் செய்துவிட்டது. எல்லோரும் வந்து பார்த்துவிட்டு பரிதாபப்பட்டுப் போனார்கள். ஆனால், சிறுவன் ரவி ஓடோடிச் சென்று தன் தாயை இங்கு அனுப்பியிருக்கிறானே! அந்தச் சிறுவனின் கருணையுள்ளம் இப்படியாயின், அவனைப் பெற்றெடுத்த தாய் எப்படி இருப்பாள் என்பதை இந்தஏழைத்தாய் இப்போது

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காருண்யம்

## பாலகர்கள் மட்டில்

ஆசிரியருரை :

எமது இலங்கைத்தீவிலே மாசிமாதமானது யேசுவின் திருப்பாலத்துவத்தின் மாதமாகக் கணிக்கப்பட்டு வருகின்றது. அன்புள்ளமும், தியாகஉணர்வும் கொண்டு விளங்கும் தனது சிறிய அப்போஸ்தலர்களாக இடம் பெற்று, தனது பாரிய மறைபரப்புதற்பணியிலே பங்கு கொள்ளும்படியாகத் திருச்சபையினால் அழைக்கப்பட்டுள்ள பன்னிருவயதுக் குட்பட்ட பாலகர்கள் மட்டில் இம்மாதத்தில் எமதுவிசேஷ கவனம் செலுத்தப்படுகின்றது. எனவே, பெற்ருேர், ஆசிரியர்கள் சிறுவர்களைப் பராமரிப்போர்க்கெனவே விசேடித்த ரீதியில் இவ்வறிக்கையை யான் விடுக்கின்றேன்.


அன்புடை நேயர்களே!... எத்துணை அதிசயமானதோர் அழைத்தலை இறைவன் உங்கட்களித்துள்ளார் என்று யான்ஈண்டு எடுத்துக் கூறவேண்டியதில்லை. உங்களுக்கெனக் கொடுக்கப்பட்ட அன்றேல் உங்கள் பராமரிப்பில் விடப்பட்டுள்ள சிருர்களை இறைவனின் அன்பர்களாக உருவாக்கும் அழைத்தற் பணியன்ருே அது. அப்படியாயின் தியாக மனப்பான்மையின் தத்துவத்தை அவர்கட்குள் புகுத்த உங்களால் முடியாவிடின் நீங்கள் அவர்களிடம் நல்லொழுக்கத்தை உருவாக்கவோ, அன்றேல் அவர்களின் வாழ்க்கையை இறைவனில் இணைந்ததாக அமைக்கவோ முடியாமற் போய்விடும். சிறுவர்களில் ஓர் உன்னத கொள்கையையிட்டு ஆழமானதும், உண்மையானதுமான அன்பைப் பிறப்பிக்க உங்களால் முடியுமான போதுதான் தியாக மனப்பான்மை அவர்களது வாழ்க்கையில் இடம் பெறுமென்க. ஒரு சிறு பிள்ளையின் அளப்பரிய உதார குணத்தையும், தான் உண்மையாகவே நேசிக்கும் ஒருவரைக் காணும்போது அதன் முகத்தில் தோன்றும் அளப்பரிய மகிழ்வையும், தான் சிநேகிக்கும் தனது அம்மாவுக்காகத் தனது சிறிய வாழ்க்கையில் அது செய்யத் தயாராயிருக்கும் பெரிய தியாகங்களையும்பற்றிய நிகழ்ச்சிகளை என்னிலும் பார்க்க நீங்களே அதிகம் அறிவீர்கள்.

இதையே யானும் உங்களிடம் இம்மாதத்தில் வினயமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். பெற்ருேரே!... ஆசிரியர்களே!... துறவிகளே!... சிறுவர்கள் பராமரிப்பில் ஈடுபட்டுள்ளோரே!... பெத்லகேமின் கிறிஸ்து பாலகன் பெயரால் நான் உங்கட்குக் கூறுவது இதோ!... கிறிஸ்து பாலகன் மட்டில் ஆணித்தரமான அன்பை உங்கள் சிருர்களில் பதியுங்கள். யேசுவை நேசிப்பதில் உள்ள அழகு நயங்களை அவர்கட்கு எடுத்துக் கூறுங்கள். பாலகயேசுவைப்போல வாழ்வதென்பது எவ்வளவு சிறந்த காரியமென்பதை அவர்கள் உய்த்துணரச் செய்யுங்கள். இவற்றைச் செய்கையில் இந்தஉலகில் பாலகயேசு செய்த தொண்டை இவர்களும் கூடச் செய்யலாமென்பதையும், இறைவனைப்பற்றி அறியாத மற்றச் சிறுவர்களுக்கும் அவரைப்பற்றிய அறிவை இவர்கள் ஊட்டலாமென்பதையும்படிப்படியாக அவர்கள் அறிந்துகொள்ளச் செய்யுங்கள். இவ்விதமாக அவர்கள் சிறியசிறிய தவக்கிரியைகளைத் தமது களங்கமற்ற இளம் இதயங்களில் நிறைந்த அன்புடன் பெறுவதற்கு முன்வர வழிகாட்டுங்கள்.

அன்பார்ந்த நேயர்களே! ஆண்டவரின் சேவையில் பின் நிற்காதேயுங்கள். இந்தச் சிருரை வழிநடாத்துகையில் நீவிர் பின்நின்ருல் இறைவனின் சேவையைப் புரியவே பின்நிற்பவர்களாவீர்கள். இப்பெரிய தொண்டைச் செய்வதற்கு நாம் உங்களையே எதிர்பார்த்துள்ளோம். இச்சிருரைச் சரியான பாதையில் வழிநடாத்திச் செல்வதற்குத் திருச்சபையானது உங்களையே நம்பியிருக்கின்றது. சிநேகம், தியாகம் என்னும் புண்ணிய பாதையில் எமது அன்புக்குரிய சிருர்களை வழிநடாத்தும் பணியில் நீங்கள் ஈடுபடவேண்டுமென பரிசுத்த பாப்பரசர் உங்கள் பக்கமாகத் திரும்பி வேண்டுதல் விடுக்கின்ருர்.

இப்பணியை மிகச் சித்திகரமாகவும், நம்பகரமானதாகவும் நீங்கள்நிறைவேற்றி முடிக்கும்படியாகச் சிறுவர்க்கான திருப்பாலத்துவ சபையானது இயங்கிவருகின்றது. பன்னிருவயதுக் குட்பட்டவர்க்கென உருவாகி, அவர்கள் பரிசுத்த பாப்பு தந்தையின் சிறியஅன்பின் அப்போஸ்தலர்களாக விளங்குவதற்கு உதவும்பொருட்டு அமைந்துள்ளது இம் மறைபரப்புதற் சபை. எனவே, எமது ஆண்டவரின் பெயரில் உங்களெல்லோரையும் நோக்கி யாம் விடுக்கும் அறிக்கை இதோ!...

உங்கள் அன்பைக் கோரும் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் உலகமடங்கலும் உணவின்றி, உடையின்றி அவதியுறுகின்றனர். தாய்—தந்தை – வீடு என்ற பாக்கியம் பெற்ற உங்கள் குழந்தைகள் உள்ளத்தில் அன்புத் தீபத்தை ஏற்றுங்கள். அவர்கள் பெரியவர்களான பிற்பாடு கிறீஸ்து பான்மையாய். பிறர் தேவை உணர்ந்து வறுமை, பிணி, பசி மிக்கு, கதியற்றுக் கலங்குவோரை ஆதரிக்க முன்வருவர்.



பெற்ருேரே!...


இப்பொழுதிருந்தே உங்கள் பிள்ளைகளுக்கு வாழ்க்கையின் உண்மைத் தத்துவங்களைப் போதியுங்கள். நாளைஎன்பது மிகப் பிந்தியதாகிவிடும்; சிருர்க்குப் போதனையை ஆரம்பிப்பதற்கு எக்காலமும் முந்தியகாலமாகிவிடாது; இவர்களுக்குத் திருப்பாலத்துவ சபையைப் பற்றி எடுத்துக்கூறி, அச்சபையில் இவர்கள் பெயர்களைப் பதிவுசெய்யுங்கள். இதனுல் இப்பொழுதிருந்தே மறைபரப்புப் பணியின் அப்போஸ்தலர்களாக அவர்களை ஆக்கி விடுபவர்களாவீர்கள்.

ஆசிரியர்களே!...

உங்களுடைய தொண்டானது எத்துணை அழகியதும் பரிசுத்தமுமானது!... தமது மென்மையான வாழ்க்கையின் வருடகாலங்களிலே இச்சிருர்கள் உங்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார்கள். பாலகயேசு இவர்களில்வைத்துள்ள மகத்தான அன்பைப் பற்றி இவர்கட்கு எடுத்துக் கூறுங்கள். தாம் நேசிக்கும் யேசுவுக்காக விசேடித்த விதத்தில் ஏதாவது செய்வதற்கு இவர்கட்கு ஆர்வமுண்டாளன இவர்களிடம்கேளுங்கள். இவர்களிடம் மறைபரப்புதற் பணியைப்பற்றிச் சிலபேசி இவர்களைத் திருப்பாலத்துவசபையின் அங்கத்தவர்களாகப் பதிவுசெய்யுங்கள்.

துறவிகளே!... கன்னிகைகளே!... சந்நியாசிகளே!

உங்களது ஆசிரியதொழில் அழைத்தலின் பரிசுத்த தத்துவத்தையிட்டு யான் உங்கட்கு எடுத்துக்கூற வேண்டியதில்லை. நீங்கள் ஒவ்வொருவருமே ஒரு மறைபணித் தொண்டராவர். உங்களது ஸ்தாபனங்களில் பன்னிருவயதுக்குட்பட்டசிருர்களுக்காக பரிசுத்த பாப்பரசரது சபையைக் கருத்துள்ள ரீதியில் ஸ்தாபிப்பதனுல் உங்களது அழைத்தலைப் பரிபூரணப்படுத்துங்கள். பாப்பரசரின் அழைப்புக்கு நீங்கள் ஒவ்வொருவரும் பதில் கொடுப்பீர்களென்பதை யான் அறிவேன். உங்கள் சிருர்க்கு அன்பை அளிப்பதன் மூலமும், திருப்பாலத்துவ சபையின் வழியாகச் செபம், சிநேகம், தியாகம் எனும் கொள்கைகளைச் சிருர்க்குக் காட்டும்படி உங்கள் ஸ்தாபன ஆசிரியர்களை வழிநடாத்துவதன்மூலம் இப்பதிலை அளியுங்கள். (மறுபக்கம்)



### தாமதமேன்?

பொறுப்புணர்ச்சியுடைய பெற்ருேர் பன்னிரு வயசு நிரம்பாத தம் குழந்தைகள் அனைவரும் திருப்பாலத்துவசபை அங்கத்தவர் ஆவதற்குத் தாமத ன்றி வழிவகுக்க வேண்டும்?

## பாப்பரசரின் மறைபரப்புப் பணிஉதவிச் சபைகள்

29, பெரேரா ஒழுங்கை, கொழும்பு-6.

அன்புநிறை துறவிகளே, கன்னியர்களே, பெரியீர்களே!....

சிறுவர்களின் மறைபரப்புப்பணி ஞாயிறுஎன அழைக்கப்படும் திருப்பாலத்துவத் திருநாள் இவ்வருடம் பங்குனி 1ஆம் திகதியில் கொண்டாடப் படுகின்றது. கடந்த ஐப்பசிமாதத்தில் அனைத்துலக மறைபரப்புப்பணி ஞாயிறை முன்னிட்டு எமக்கு முழுமனதுடனே ஒத்துழைப்பை ஈந்த நீங்கள் பரிசுத்த பாப்பரசரது சொந்தக் கருத்தாகிய இப்பெரிய கருத்துக்காகவும் உங்கள் மனமார்ந்த உதவிகளை அளிப்பீர்களென எதிர்பார்க்கின்ருேம்.

திருப்பாலத்துவ சபையானது பன்னிருவயதுக் குட்பட்ட பாலகர்க்கான பாப்பரசரது மறைபரப்புப் பணியுதவிச் சபையென்பதையும், உலகமடங்கிலுமுள்ள அநாதை மடங்களையும் சிறுவர் ஸ்தாபனங்களையும் நடாத்துவதில் உதவிபுரிவதற்கென விசேடித்த ரீதியில் கருதப்படுவதென்பதையும் நீங்கள் அறிவீர்கள். இலங்கையிலேயுள்ள எமது சொந்த ஸ்தாபனங்கள் திருப்பாலத்துவத்தினுல் மிக உதாரகுணமான உதவிகளைப் பெற்றுவருகின்றன.

இச்சபையிற் சேரவிரும்பும் சிறுவர்களைப் பதிவுசெய்துகொள்ளும் நாள் மாசிமாதம் 2-ந் தேதியாகும். திருப்பாலத்துவ சபையின் வெற்றிக் கொடியின்கீழே பன்னிருவயதுக்குட்பட்ட பாலர்களை இயன்றளவில் பெருந்தொகையாகப் பதிவுசெய்ய நீவிர் பிரயாசை எடுப்பதனுல் உலகமுழுவதிலும் பரந்துள்ள கிறீஸ்துவின் வறியோர்க்கு உதவியளித்தவர்களாவீர்கள். இச்சபையின் அடிப்படையில் விதைக்கப்படும் சிநேக தியாக உணர்ச்சிகளானவை, சிறுவர்களின் இளமனதிலே ஆழமாக வேரூன்றப்பட்டு பிற்காலத்தில் திருச்சபையை உருவாக்கும் சிறந்த பிரசைகளை உதவுவதுடன, அனைத்துலக கத்தோலிக்க மறைபரப்பு நாடுகட்குத் தம்மையே மறந்துவிட்ட உதாரகுணத்துடனே உதவக்கூடிய உத்தமர்களையும் உருவாக்கும் என்பதை நீவிர் மனத்திற் கொள்ளவேண்டும். எமது உதாரகுணத்தை நாம் காட்டும்படியாக எத்தனையோ வகையான சபைகள் எம்மிடையே நிலவுகின்றன. ஆயின் பரிசுத்த பாப்பரசரது சொந்தச் சபையான திருப்பாலத்துவ சபையானது, குழந்தைத் தாபரிப்பு நிலையங்கள், அநாதை மடங்கட்கென விசேடவிதத்தில் உருவானதாகும்.

உங்களது சிறுவர்களின் செபவேண்டுதல்களும், தியாகக் கிரிகைகளுங் மிக விரும்பத் தக்கதாகும். இவை இந்நோக்கத்திற்காக உதவுவோர் அனைவோர்மேலும் இறைவனின் அருளைப் பொழியச் செய்யுமென்க.

கிறீஸ்துவில் உங்கள் தந்தையான
மொஞ்சிஞ்ஞோர் மனிக் முத்துக்குமாரு,
தேசிய இயக்குனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனிதர் பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை

யாழ்நகர் புனித பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை மாதாந்த கூட்டம் நிகழ்மாதம் 27ஆம் நாள் வெள்ளிக்கிழமை (போயா முன்தினம்) பிற்பகல் 4 மணிக்கு நிகழும். அங்கத்தவர்கள் யாவரும் சமுகந் தருக.

அ. பி. முத்தையா
தலைவர்

## மண் குடிசை

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

நிரூபித்துவிட்டாள். அப்படியாயின், மாட்டுக் குடிலில் பிறந்த ஏசு நிச்சயமாக இந்த ஏழையின் மண் குடிசையில் மறைந்து வாழத்தான்வேண்டும். புனித மலர்களால் சூழப்பட்ட அந்த மண் குடிசையை பார்த்துவிட வேண்டும் என்ற அணையாத் தீ என் உள்ளத்தே பற்றிஎரிந்தது.

"சுவாமி, நான் மண்டாடின மண்டாட்டுத்தானுங்க இந்த ஆச்சியைக் கடவுள் இங்கு அனுப்பியிருக்கிறார். எனக்கிது சுமை எண்டு நீங்க நினைக்கக்கூடாது; மறுக்காமல்..."

இதற்குமேல் அவரால் எப்படி மறுப்புக் கூற முடியும்? இராவோடு இரவாக அவரால் பழுதுபார்க்கப்பட்ட அவருடைய பழைய கார் அந்தஆச்சியையும் ஏற்றிக்கொண்டு இறைவன் மறைந்து வாழும் மண் குடிசையை நோக்கிப் பறந்து சென்றது.

## வேலை வாய்ப்புக்கு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வில்லை. இத்தகைய நூலைத் தன்னும் அம்முயற்சிகள் வெளிவருவியாத்து வருந்தத்தக்கதே: ஆகவே, இந்நூலை வெளிவருவிக்கத் தாயார் அவர்கள் படும் பெரும் பாட்டுக்காக இந்நாட்டு மக்களும் விசேஷமாக யுவதிகளும் பெருங் கடமைப்பட்டவர் ஆகின்றனர்.

---

அறிவித்தல்

## காவலன் சந்தாதாரர் கவனத்திற்கு!

1969-ம் ஆண்டுக்கான காவலன் சந்தாத் தொகைப் பாக்கி கட்டவேண்டியிருப்பவர்கள் பங்குனி 15-ம் தேதிக்குள் அதைக் கட்டுவதோடு, 1970-ம் ஆண்டுக்கான சந்தாவைப் புதுப்பித்து காவலனுக்கு ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். சந்தா இலக்கத்தைக் குறிக்க மறக்கவேண்டாம்.

— நிர்வாக ஆசிரியர்

அனுப்பவேண்டிய முகவரி:

நிர்வாக ஆசிரியர்,
தபால் பெட்டி இல 2,
யாழ்ப்பாணம்.

---

விசுவாசப் பரப்புதல்சபை விசேஷதூதர்

## இலங்கைவந்து செல்கின்றார்

ஐக்கிய அமெரிக்கதேச விசுவாசப் பரப்புதல் சபைத்தலைவர் மொஞ்சிஞ்ஞோர் எட்வட் மியாரு அடிகளார் சென்றவாரம் இலங்கைக்கு ஒருவிசேஷ விஜயம்செய்து திரும்பியுள்ளார். இவரது சுருங்கியகால சுற்றுப்பிரயாணத்தில் இலங்கை, இந்தியா, பாக்கிஸ்தான் நாடுகள் அடங்கியிருந்தன. இலங்கையிலே தங்கியிருந்த காலத்தில் இவர் இந்நாட்டு மேற்றிராணிமார் யாவரையும் சந்தித்து, இலங்கையின் விசுவாசப் பரப்புதல்சபைத் தலைவரான வண. மணிக் முத்துக்குமாரு சுவாமியாருடனும் பலஆலோசனைகள் நடத்தியிருக்கிறார். விசுவாசப்பரப்புதற் சபையின் தொண்டாற்றும் அகில உலகத்தையும 12பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவும் முழுஉலக முன்னேற்றத்திலும் கவனம் எடுத்துவரப் பணிக்கப்பட்டிருக்கின்றது. மியாரு அடிகளார் இத்தகைய பணியிலேயே கவனம் செலுத்த இலங்கைவந்து செல்கின்றார்.

## காருண்யம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரையிலும் இச்சபையின் நலனுக்காக எவ்வளவோ பரித்தியாகம் செய்துள்ளவர்களுக்குப் பரி, பாப்பரசரது பெயரால் நன்றிகூறுகின்றேன். அன்றியும் இம்மாசி மாதத்தில் உங்களால் இயன்றதைச் செய்யும்படியாக மற்றொருமுறை உங்களை இரந்து கேட்கின்றேன். இவ்வருடத்தில் ஒவ்வொரு சிறுவனையும் சிறுமியையும் திருப்பாலத்துவசபையின் அங்கத்தவர்களாகக் கொண்டுவருவீர்களாயின், பெற்றோராகவும், ஆசிரியர்களாகவும், துறவிகளாகவும் விளங்கும் நீங்கள் அன்பின் தேவனுக்கு மிகப்பெரிய ஒப்புக்கொடுத்தலை அளித்தவர்களாவீர்கள்.

பன்னிருவயதுக் குட்பட்ட எமது மறைப் பணியாளர் தொகையில் பெருக வேண்டும். இவ்விடயமாகத் திருச்சபை உங்களிலே தங்கியுள்ளது; இறைவன் உங்களை ஆசிர்வதிப்பாராக.

கிறீஸ்து பாலகனில்
உங்கள்மேலன்புள்ள,
அதிவண, மொஞ்சிஞ்ஞோர்,
மனிக் முத்துக்குமாரு.

---

# சிலுவையின் பாதை

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தன! புனித பிரான்சிஸ்குவின் அடியார்கள் திருத்தலங்களை பாதுகாப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள் கொஞ்சநஞ்சமல்ல. அவர்களின் அரும்பெரும் தியாகங்கட்கு கைம்மாறாக பலஸ்தீனத்திலுள்ள திருத்தலங்களைப் பாதுகாக்கும் உரிமையை திருத்தந்தை, புனித பிரான்சிஸ்கு சபைத்துறவிகளிடம் ஒப்படைத்தார். அன்றிலிருந்து இன்றுவரை இத்தூய பணியில் அவர்கள் சிறப்பாக உழைத்துவருகிறார்கள்.

புனிதரான பிரான்சிஸ்கு அசிசியார் 1219-ல் பலஸ்தீனாவுக்கு வருகை தந்தார். காலணிகளைக் கழற்றிவிட்டு கிறிஸ்துபெருமானின் வியாகுலப்பாதைவழியே சென்று சிலுவைப்பாதையை அனுசரித்தார். இந்தஅரிய பக்தி முயற்சியை ஏன் மற்றைய இடங்களிலும் அனுசரிக்கக் கூடாதென அவர்மனதில் ஓர் எண்ணம் உதித்தது. அவரது சபையார் இந்த எண்ணத்துக்கு நல்ல உருவம் கொடுத்தனர். முதலில் பெருசலேமில் இன்று வியாகுலப்பாதை என்ற நாமத்தால் அறியப்படும் கிறிஸ்து சிலுவை சுமந்துசென்ற பாதைவழியையும் கல்வாரி மேட்டையும் ஒத்த நிலஅமைப்புள்ள இடங்களைத் தேடி அங்கு சிலுவைப்பாதையின் முக்கிய நிகழ்ச்சிகளை நினைவுறுத்தும் சில தலங்களை அமைத்து சிலுவைப்பாதைப் பக்தியை நடாத்தினர்.

இதே முறையில் இத்தாலியிலும் இப்பக்தி முயற்சி தொடங்கப்பட்டது. அங்கு லொம்பாடியில், வாால்லோ மலையடிவாரத்தில் 1491-ல் அமைக்கப்பட்ட சிலுவைப்பாதைத் தலங்கள் சிறப்புப்பெற்றவையாகும். இந்த தலங்கள் ஒவ்வொன்றிலும் சிற்றாலயம் ஒன்றும் காணப்பட்டது. 1500-ம் ஆண்டுக்குமுன்னர் இவ்விதம் இத்தாலியில்மட்டும் 64சிலுவைப்பாதைத்தலங்கள் உருவாக்கப்பட்டன. பின்னர் டோமினிக்கன் சபைத்துறவியர் இவ்வழக்கத்தை ஸ்பெயினுக்கு கொண்டுசென்றனர். பதினாறுவது நூற்றாண்டில் சிலுவைப்பாதைத் தலங்கள் அமைக்கும் முயற்சி ஐரோப்பாவெங்கணும் வேகமாகப்பரவியது.

முதலில் சிலுவைப்பாதைத் தலங்கள் மூன்றாக இருந்தன. பின்னர் ஏழாக அதிகரித்தன. பதினெட்டாவது நூற்றாண்டில் பதினான்குஆக அதிகரித்தது. பதினேழாவது நூற்றாண்டின் இறுதியில் திருத்தந்தை பதினோராம் இன்னோசந்த் அவர்கள் சிலுவைப்பாதை முயற்சிக்கு பெருமாதரவு தந்து ஆலயங்களிலும் சிலுவைப்பாதைச் சொருபங்களை அல்லது படங்களை நிறுவலாம்என உத்தரவும் தந்தார்.

இதிலிருந்து இப்பக்தி முயற்சி திருச்சபையெங்கும் பரவலாக அனுசரிக்கப்படலாயிற்று. இலங்கையிலும் கல்வாரி மேட்டையும் வியாகுலப்பாதையையும் எமக்கு அறிவுத்தும் சில யாத்திரைத் தலங்கள் உண்டு. அவற்றுள் காலி நகரத்துக்கு அண்மையில் அமைந்திருக்கும்கினிதும தலம் சிறப்புப்பெற்றதாகும்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பலஸ்தீனாவிலுள்ள பிரான்சிஸ்கன் துறவிகள் அந்தோனியா கோட்டை அமைந்திருந்த இடத்திலிருந்து தொடங்கும் சிலுவைப்பாதை உலகப்பிரசித்திபெற்றது. வியாகுலப்பாதை வழியாக கிறிஸ்து பெருமானின் திருப்பாதங்கள் சென்ற அதே வழியில் அவர்கள் நடாத்தும் சிலுவைப்பாதையில் பங்குகொள்ள ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் ஜெருசலேம் நகரில் கூடுகின்றனர். திருத்தந்தை ஆறுவது சின்னப்பர் பலஸ்தீனா சென்றபோது தாமே இச்சிலுவைப் பாதையை முன்னின்று நடாத்தினார்.

கிறிஸ்துவின் திருப்பாடுகளை தியானிப்பதற்கு சிலுவைப் பாதை ஓர் உத்தமமானவழி. அது ஒரு நல்லசெபம். அது ஒரு தபமுயற்சியுமாகும்.

---

இலங்கைப் பாடசாலைகளில் பாவனைக்குவரும் வித்தியாபகுதியினரால் அங்கீகரிக்கப்பெற்ற

## 1970-ம் ஆண்டிற்கான

## கத்தோலிக்க மறைக்கல்வித் தமிழ்ப்பாட நூல்கள்

| வகுப்புகள் | பாடநூல்கள் | பாகம் | விலை |
|---|---|---|---|
| 3ஆம் ,, | நமது வழித்தொடர்ச்சி (அச்சில்) | 2-ம் பாகம் ... ... | 1–50 |
| 4ஆம் வகுப்பு | நமது வழித்தொடர்ச்சி | 3-ம் பாகம் ... ... | 2–00 |
| | அன்பின் ஆட்சி | 1-ம் பாகம் ... ... | 50 |
| 5ஆம் வகுப்பு | நமது வழித்தொடர்ச்சி | 4-ம் பாகம் ... | 2–00 |
| | அன்பின் ஆட்சி | 2-ம் பாகம் ... ... | 50 |
| 6ஆம் வகுப்பு | வாழ்வும் வழியும் ... ... ... | 1-ம் பாகமும் | |
| | அனுபந்தம் — திருச்சபைச் சரித்திரம் பிரதான சம்பவங்கள் உட்பட ... ... | ... ... ... | 1–25 |
| 7ஆம் வகுப்பு | வாழ்வும் வழியும் ... ... | 2-ம் பாகமும் | |
| | அனுபந்தம் — திருச்சபையின் இலங்கைச் சரித்திரம் போர்த்துக்கேயர் காலம் — 1505—1658 உட்பட | ... ... | 1–25 |
| 8-ஆம் வகுப்பு (J. S. C.) | கத்தோலிக்க திருமறை விளக்கம் | 1-ம் பாகமும் | |
| | அனுபந்தம் — திருச்சபையின் இலங்கைச் சரித்திரம் ஒல்லாந்தர் காலம் 1658 — 1796 உட்பட ... | ... ... ... | 1–25 |
| 9ஆம் வகுப்பு Prep S.S.C.) | கத்தோலிக்க திருமறை விளக்கம் ... ... | 2-ம் பாகம் ... ... | 1–50 |
| 10ஆம் வகுப்பு (G. C. E.) | கத்தோலிக்க திருமறை விளக்கம் | 3-ம், 4-ம் பாகம் ... ... | 1–50 |
| | லூக்காஸ் சுவிசேஷம் ... | ... ... | |

**கிடைக்குமிடம்:** அர்ச். சூசைமாமுனிவர் புத்தகசாலை, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

* * * *

1970-ம் ஆண்டு இறுதியில் யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் எல்லா வகுப்புகளுக்கும் மேற்படி பாடநூல்களைத் தழுவி மறைக்கல்விப் பரீட்சை நடைபெறும்.

யாழ் மேற்றிராசன
மறைக்கல்வி மேற்பார்வையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## மேற்குநாடுகளில் மூன்றுவருடத்தில் 20,000 குறைவு

சென்றவாரம் வத்திக்கானில் வெளிவந்த புள்ளிவிபரங்களின்படி, மேற்கு நாடுகளில் சென்ற மூன்றுவருடங்களில் சுமார் 20,000 தேவ அழைத்தல்கள் குன்றிவிட்டன. ஐரோப்பாவிலும் மேற்குநாடுகளிலுமாக 41 நாடுகளின் புள்ளிகளின் ஆதாரங்களின்படி 1968-ம் ஆண்டு குருமாணவர் தொகை146,996 ஆகவும் 1965-ம் ஆண்டுத் தொகை 166,000 ஆகவும் இருந்தது. ஆனால் உலகிலே கத்தோலிக்கரின் தொகை இம்மூன்று வருடங்களிலும் 13,800,000 கூடியிருக்கின்றது.

# குலவிளக்கு

—எஸ். இ. ஜெயராசா, நரக்களி

ஒரு சிறு கிராமம், அதி லேயோர் வீடு, அவ்வீட்டிலே ஓர் அமைதியான குடும்பம். அக் குடும்பத்தலைவனே நெற்றி வியர்வை நிலத்திற் சிந்த அல்லும் பகலும அயராதுழைப்பவன். தெய்வ பக்தி நிறைந்தவன். அவன பெயர் சூசைதாசன். சூசைதாசன் என்ற தனது நாமம கொண்ட புனித சூசையப்பரின்மேல அளவில்லாத பக்திகொண்டவன். எது காரியத்திற்கும் அவன் சூசையப்பரின்மூலம் தான் இறைமகன யேசுவை இறைஞ்சினான். அவன் மனைவி அன்னம்மாவும் சாடிக்கேற்ற மூடி போல் அவனுடைய குணங்கள் அத்தனையும கொண்டிருந்தாள். இத்தம்பதிகளுக்கு மரியதாஸ் எனும் ஒரு புதல்வனும, மரியகொரட்டி எனும் ஒரு புதல்வியும் இருந்தார்கள். இவ்விருவரும் தம் பெற்றோர்க்கு "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற கூற்றுக்கிணங்க அவர்களுக்கு அமைந்தும, அவர்களுக்குச் செய்யவேண்டிய சங்கை செய்தும் நகமும் சதையும் போல இரத்தப்பாசத்துடன் ஒன்றித்து வாழ்ந்து வந்தார்கள்.

சூசைதாசனும் அன்னம்மாவும தங்கள் மக்களை மாணிக்கம போல் பாதுகாத்து வளர்த்து வந்தார்கள். மரியதாசும், மரியகொரட்டியும எங்கு சென்றாலும் இருவரும் ஒன்றாகத்தான செல்வார்கள். இருவரும் தங்கள் குக்கிராமத்திலே உள்ள அரசினர் பாடசாலையிலே கல்வி பயின்று வந்தார்கள். இவ்விருவரும் தங்கள் வகுப்புகளிலே மிகவும் திறமைசாலிகளாகத் திகழ்ந்ததுடன் தங்கள் குடும்ப நிலையை உணர்ந்து மிகக் கவனத்துடன் கல்வி பயின்றார்கள். இவ்வண்ணமாகக் கல்வி பயின்று மரியதாஸ் ஒரே முறையிலேயே ஐந்து திறமைச் சித்திகளுடன் ஜீ. சி. ஈ. பரீட்சையில் தேறினான். துன்பப்படுகிறவர்களைக் கடவுள் தேற்றுகிறார். அந்த ஏழைச்செல்வன் மரியதாஸ் தன கடமையை நிறைவேற்ற இறைமகன் யேசு அவனுக்குக் கருணை கூர்ந்தார். மரியதாசும் வாலிபப்பருவம் அடைந்தான். மரியகொரட்டியும் பதினறு வயது நிரம்பிய இளம் மங்கை. பரீட்சையில் தேறி ஈராண்டுகளின் பின்னர் மரியதாசுக்கு ஒரு கூட்டுத்தாபனத்தில் வேலை கிடைத்தது. மாத வேதனம் ரூபா 200 மட்டுமே. சூசைதாசனின் குடும்பத்தை இறைவன் ஆசீர்வதித்தார். இவ்வண்ணமே மரியதாஸ் பணிபுரிந்து வருகையில் அவனுடைய அறிவுத்திறனையும், ஆற்றலையும், முயற்சியையும், ஒழுக்கத்தையும் கண்ணுற்ற அக்கூட்டுத்தாபன மேலதிகாரிகள் அவனை அந்தத்துறையில் விசேட பயிற்சிபெறுவதற்காக ஜேர்மனி தேசத்துக்கு அனுப்புவதற்குத் தீர்மானித்தார்கள். இதை மரியதாஸ் தனது பெற்றோருக்குக் கூறினான். அவனுடைய பெற்றோர்களும் அதற்குச் சம்மதித்தார்கள். குறித்த திகதியிலே மரியதாசும் புறப்பட்டான. சூசைதாசன் குடும்பத்தினர் மரியதாசை வழி அனுப்பிவைப்பதற்காக கட்டுநாயக்கா விமான நிலையம் சென்றனர். குறித்த நேரத்திலே விமானமும் புறப்பட்டது. மரியதாஸ் எல்லோருக்கும கைகூப்பிக் கும்பிட்டு விட்டுப் பயணமானன். சூசைதாசன் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான. மரியதாசின் அன்புத்தங்கை மரியகொரட்டி ஈருடலும் ஓருயிரும்போல் ஒன்றாக வாழ்ந்த தன் அன்பு அண்ணனைச் சிலகாலம் பிரிந்திருக்க வேண்டுமே என்று எண்ணி எண்ணித் துக்கப்பட்டாள்.

அங்கு விமான நிலையத்தில் அங்குள்ள பயிற்சிக்கூட அதிகாரி ஒருவர் மரியதாசை வரவேற்று அழைத்துச் சென்றார். மரியதாஸ் அங்கு தன பயிற்சியைத தொடங்கினன். வருடங்கள் சில உருண்டோடின. வறுமைக் கடலிலே தத்தளித்த சூசைதாஸ் குடும்பத்திற்கு கடவுள் படிப்படியாகப் புத்துயிரளித்தார். சூசைதாசுக்கு விவசாயத்தில் பெரும் ஆதாயம் கிடைத்தது. அதுமட்டுமல்லாமல் மரியதாசின் தங்கை மரியகொரட்டியும் பரீட்சையில் தேறி சில வருடங்களின்பின்னர் அயற் கிராமத்திலே உள்ள பாடசாலை ஒன்றில் மாணவ ஆசிரியையாக நியமிக்கப்பட்டாள். சூசைதாசின் குடும்பத்துக்கு புதுவாழ்வு பிறந்தது. குடும்பம் மலர்ந்தது. கல்வியறிவற்ற பாட்டாளியான சூசைதாசனின் குடும்பத்துக்கு மரியதாஸ் ஜேர்மனி சென்ற நாள் தொடக்கம் குடும்ப விளக்காகத் திகழ்ந்தாள் அவன் மகள் மரியகொரட்டி. மரியகொரட்டியோ குழந்தை உள்ளம் படைத்தவள். எதையும் தாங்கும் இதயமுள்ளவள். அவள் தனது கடமையை சிறப்பாகச்செய்து வந்தாள். இவ்வண்ணமாக வருடங்கள் பல உருண்டோடின. மரியகொரட்டி ஆசிரியகலாசாலைப் பிரவேசப் பரீட்சை எடுத்து அதிலும் தேறி பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டாள். புத்தாண்டிலே சூசைதாஸ் தம்பதிகள் தமது மகள் மரியகொரட்டியை கோப்பாய் மகளிர் ஆசிரியகலாசாலைக்குக் கொண்டுசென்று விட்டுவிட்டு வீடு திரும்பினர். அன்று முதல் சூசைதாசனும் அவர் மனைவி அன்னம்மாவும் தனிமையாகவே வாழ்ந்தார்கள். மரியகொரட்டி மூன்றுமாதங்களின் பின்னர் முதலாம பருவ விடுமுறைக்கு பஸ்வண்டியில் தன்னூருக்கு வந்தாள். அவ்வேளை பஸ்வண்டி விபத்துக்குள்ளானது. மரியகொரட்டி ஸ்தலத்திலேயே மரணமானள். ஐயோ! பாவம்...... பருவ விடுமுறைக்கு பெற்றவர்களுடன் மகிழ விடுவந்த மங்கை மரியகொரட்டிக்கு விதி சதிசெய்துவிட்டது.

அன்புப் புதல்வி மரியகொரட்டியின் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்த பெற்றோர்கள் ஏமாற்றமடைந்தனர். என்ன செய்வது! ரோஜா மலர்போல் மலர்ந்த குடும்பத்தில் துன்பம் புகுந்தது. மரியகொரட்டியின் மரணச்செய்தியை சூசைதாஸ் தனது மகன் மரியதாசுக்கு அறிவிக்கவில்லை. சூசைதாசனே தன தருமைமகள் மரியகொரட்டியின் பிரிவை நினைத்துநினைத்து ஏங்கி ஏங்கி ஊணுறக்கமற்றான். அன்னம்மாவும் அதே பாடுதான். இவ்வண்ணமாக மாதங்கள் சில கழிந்தன. அதே ஆண்டிலே மரியதாசும் தனது பயிற்சியை முடித்துக்கொண்டு விமானம்மூலம் நாடு திரும்பினன். விமான நிலையத்திலே அவனுடைய கூட்டுத்தாபன அதிகாரிகள் சிலர் அவனை வரவேற்றார்கள். மரியதாசோ அங்கு தனது பெற்றோர்களையும் அருமைத்தங்கை மரியகொரட்டியையும் காணமையால் சந்தேகமடைந்தான். நாடு திரும்பிய அவன் மனத்திலே எழுந்த மகிழ்ச்சி மேலீட்டின் மத்தியிலே விமானநிலையத்தில் பெற்றோர்களைக் காணமை அவன் உள்ளத்தில சிந்தனையைக் கிளறிவிட்டது.

கூட்டுத்தாபன அதிகாரிகளால் நடைபெற்ற விருந்து பசாரனை முடிந்ததும் மரியதாஸ் வீடு நோக்கிப்புறப்பட்டான். ஐயோ! பாவம்!! உவகை பொருந்திய அவன் முகம் சோகமயமாக மாறப்போகின்றது. மரியதாஸ் தன் தங்கைக்கு இப்படி நடக்குமென்று கனவிலும் நினைத்திருப்பானே? இப்படியே மரியதாஸ் வீட்டை அடைந்தான். வீட்டின் முன்புறத்தில் யாரையும் காணமல் சந்தேகமடைந்தவனாய் வீட்டினுள்ளே நுழைந்தான். அங்கு!...... அவன் கண்டகாட்சியைக் கூறவும் வேண்டுமா? வீட்டினுள் தனது பெற்றோர்கள் தங்கை மரியகொரட்டியின் புகைப்படத்திற்கு விளக்கேற்றி அதன்முன் கைகுவித்துக் கண்ணீர் மல்கக் கண்டான். கண்டதும் தங்கைச்சி ...கண்ணே.......போயிட்டியாம்மா. இனி உன்னை எப்போதம்மா காணப்போகின்றேன். உன் பொன்போன்ற வாயினலே ஓர் ஆசைவார்த்தை பேசமாட்டாயா?...... அண்ணு என்று அழைப்பாயே...... இப்போது ஏனம்மா வாய்மூடி இருக்கிறாய்....அண்ணன் வருவான் அன்பு மொழி பேசலாம என்று காத்துக் கொண்டிருந்தாயே... இதோ வந்துவிட்டேன் தங்கைச்சி... பேசு! பேசு!! பேசம்மா!!! பேசு!!!!...அப்பா! அம்மா!! தங்கைச்சிக்குஎன்ன நடந்தது தங்கைச்சியை சாகவைத்து விட்டீங்களே......

தங்கைச்சி! நான் படித்துப் பதவிபெற்று உனக்கு நானே திருமணம் செய்துவைத்து உன்னை மணக்கோலமாகக் கண்டுகளிப்பேன் என்றெல்லாம் எண்ணியிருந்தேனே... இப்போ உன் அண்ணனைத் தவிக்கவைத்துவிட்டாயே... இவ்வளவுதானு உன் வாழ்வு? ...தங்கையே......வறுமைக் குடும்பத்தை மலரவைத்த குலவிளக்கே...குலமங்கையர் திலகமே...மாணிக்கச்சுடரே! .....மாண்டுவிட்டாயா?...... என்று புலமபினன். இப்படியே மரியதாஸ் துக்கமேலீட்டினல் உணர்விழந்தான். அவன் அன்னை அன்னம்மா அவனை உறங்கவைத்து ஆறுதல்கூறினன். அடுத்தநாள் உதயத்தில் மரியதாஸ் தனது பெற்றோர்களுடன் சேமக்காலைசென்று தனதன்புத்தங்கை மரியகொரட்டியின் கல்லறையில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செய்தான். சேமக்காலையில் அவன் சிந்திய கண்ணீர்த்திவலைகள் தங்கை மரியகொரட்டியின் கல்லறையைக் கழுவியது. இப்படியே சில நாட்கள் கழிந்தன. மரியதாசின் நண்பர்கள் நாளும்பொழுதும் அவனைத் தேற்றினர்கள். சிலமாதங்களின் பின்னர் மரியதாசுக்கு அவனுடைய கூட்டுத்தாபனத்திலே பதவி உயர்ச்சி கிடைத்தது. யாவரும் புத்துயிர் பெற்றனர். அடுத்த ஆண்டிலே மரியதாசுக்குத் திருமணம நடைபெற்றது.

(யாவும் கற்பனை)

## பைபிள் படிப்போம்

**பொருத்தமானதைத் தெரியுங்கள் :**

(1) மச்சத்தின் வயிற்றில் இருந்தவர்—மோசேஸ்.

(2) சிங்கக்குகையில் விடப்பட்டவர்—நோவா.

(3) காகத்தினுல் போஷிக்கப்பட்டவர்—யோனஸ்.

(4) பொறுமைக்குப் பெயர்போனவர்—சாம்சன்.

(5) நீரிலிருந்து காப்பாற்றப்பட்டவர்—தானியேல்.

(6) மிகுந்த பலசாலியாகத் திகழ்ந்தவர்—எலியாஸ்.

(7) சலப்பிரளயத்தில் காப்பாற்றப்பட்டவர்—யோசேப்.

(8) மன்னன் சிரசை வெட்டியவள்—லோத்மனைவி.


(9) அடிமையாக விற்கப்பட்டவர்—யோபு.

(10) உப்புச் சிலையாக மாறியவள்—யூடித்.

**உங்கள் விடைகளைச் சரி பாருங்கள் :**

1—3, 2—5, 3—6, 4—9 5—1, 6—4, 7—2, 8—10, 9—7, 10—8,

தயாரிப்பு — இ. பே.




அன்புள்ள தம்பி-தங்கையரே வணக்கம்!

பாலகனே! நீ வறுமையால் வாடுகிருயா? வறுமை உன்னை வாட்டி வதைக்கிறதா? தாங்கமுடியா வறுமையால் தவிக்கிருயா? கலங்காதே. ஏழ்மை தாழ்த்தி விடும் என்று ஏங்காதே. வறுமை உன்னை வெறுமையாக்கிவிடாது.

வறுமைதான் நல்வாழ்வின் வழிகாட்டி. உயர்வு என்னும் மலையின் உச்சிக்கு உன்னை அழைத்துச் செல்லும் உன்னதமான ஏணி வறுமைதான்.

உண்மை, அன்பு என்பன வறுமையின் இடையில் தான் உதிக்கும். உன்னத இலட்சியங்கள் வறுமையின் உதரத்திலேதான் உற்பவிக்கும். சிந்தனையின் பிறப்பிடம் வறுமைதான். ஏழைகளின் இதயந்தான் இரக்கத்தின் இருப்பிடம். இந்த உலகின் உத்தமர்களும், பெரியோர்களும், அறிஞர்களுங்கூட ஏழைகளின் மக்களாகவே பிறந்தார்கள். வறுமையின் மடியில்தான் வளர்ந்தார்கள்.

இப்பூவுலகின் இரட்சகராகிய யேசுபெருமான் வறுமைக் குடிசையிலேதான் அவதரித்தார் என்பதை மறக்காதே.

— அண்ணு

## பாதி பாதி!

வாகரை வாணன்

என்னுள்ளே ஒருமிருகம்
இருந்து இடப்பக்கம்
தன்னிஷ்டப்படி என்னைத்
தலையாட்ட செய்யுதடா!

பூனைபோற் பதுங்கி
புலிபோலப் பாய்ந்து
ஆனைபோல் வெறிகொண்டு
ஆமைபோல் அடங்குதடா

நரிப் புத்தியோடு
நாய்க்குணமும் சேர்ந்துதம்
விருப்பத்திற் கேற்பஎனை
விளையாடி வெல்லுதடா!

என்னுள்ளே ஓர்தெய்வம்
இருந்து வலப்பக்கம் (கு
'உன்னைத்தான்' என்றெனக்
ஓர்குரல் கொடுக்குதடா!

கனவு கண்டஞ்சி
கண்விழிக்கும் மனிதன்
போல்

தினமும் நான் இந்தத்
தெய்வத்தின் குரல்கேட்டு

நல்ல ஒருவழியில்
நடக்கக் கால்எடுத்தால்
கொல்லும் விலங்குணர்வு
குறுக்கேவந்து பாயுதடா!

தெய்வம்பாதி; மிருகம்பாதி
சேர்ந்த ஒருபடைப்பு
வையந்தன்னில் உண்டுஅடா
மனிதன் என்னும்பேரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு தீவுகள் இணைந்த இரணைதீவு

## வட்டக் குடிசையில் வாழும் மக்கள் வரலாறு

(காவலூர்க் கவிஞர் ஞா. ம. செல்வராசா)

யாழ்ப்பாணக் குடாநாட்டைச்சுற்றி அமைந்துள்ள தீவுகளிலே இரணை தீவுமொன்றாகும். இத்தீவு யாழ்ப்பாணத்திலிருந்து 30 மைல்தூரத்திலும், கத்தோலிக்கரின்புனித க்ஷேத்திரமாய் விளங்கும்,பாலைதீவிலிருந்து 15 மைல் தூரத்திலும் அமைந்துள்ளது. இத்தீவை இரணைதீவு, இரட்டைத்தீவு, சகோதரர் தீவு எனப் பல நாமங்கொண்டழைப்பர். இத்தீவிற்குச் சூட்டப்பெற்ற அரும் பெரும் நாமத்தின் அர்த்தத்தை அறிதற்கு ஒரு முறை யாழ்ப்பாணத் துறைமுகத்திலிருந்து மோட்டார்ப் படகிலோ அல்லது வள்ளங்களிலோ செல்வோமானால் அதன் உண்மை நன்கு விளங்கும்.

பாலைதீவைக் கடந்தவுடன் இத்தீவானது தனித்தனியாக அமைந்த இரு பெருந் தீவுகளாகக் கண்ணுக்குப் புலப்படும். இவ்வற்புதக் காட்சியைக் கண்டவுடன் சகலரும் எவ்வித தயக்கமுமின்றி ஒரே வாய்ப்பட புறம்பு புறம்பான தனித்தனித் தீவென்றே முடிவு கட்டுவர். பாலைதீவைக் கடந்து பத்து மைலுக்கப்பால் வந்ததும் இரட்டையாகத்தெரிந்த இத்தீவு நாலுமைல் நீளமுள்ள ஒரு தனித் தீவாகக் காட்சியளிக்கும். இதனிமித்தமே இதன் இயற்கையமைப்பின் அழகை அறிந்து அறிஞர்கள் இதற்கு இரணை தீவென்ற நாமத்தைச் சூட்டினர்.

### ஆதிக் குடிகள்

இத்தீவுமக்கள் சுமார் 500 ஆண்டுகளுக்குமுன் நெடுந்தீவிலிருந்து சாயவேர் எடுக்கும் நோக்கமாகக் கச்சதீவு, கற்கடதீவு, பாலைதீவு, எருமைத்தீவு முதலாம்தீவுகளுக்குச் சென்றவண்ணம் இரணைதீவுக்கும் வந்துள்ளார்களென்றும், காலகதியில் இத்தீவையே தம் தாயகமாகக் கொண்டு வாழ்ந்துள்ளார்களென்றும் ஒரு சிலர் கூறுவர். வேறுசிலர் இவர்கள் நீர்கொழும்பிலுள்ள குருகுல மக்களென்றும், இலங்கையின் வடபாலுள்ள சாகரத்தை ஊடறுத்து மச்ச வேட்டையாடும்பொருட்டு யாழ்ப்பாணக் குடாநாட்டை அடைந்து கல்முனை, கவுதாரிமுனை, பள்ளிக்குடா, எரிக்கந்தமுனை, நாச்சிக்குடா முதலாமிடங்களுக்கு மெல்லமெல்லக் குடியேறி ஈற்றில் இரணைதீவையே தங்கள் சொந்த இருப்பிடமாக அமைத்துள்ளார்களென்றுங் கூறுவர். இவர்கள் சுமார் 370 ஆண்டுகளுக்குமுன் கண்ணுடிப்பாதிரியார் என்றழைக்கப்படும் வண. பேதுறு தே பெற்றங்கோர் சுவாமியாரால் ஞானத்தீட்சை பெற்றுக் கத்தோலிக்கரானார். இவர்களின் மேற்பார்வையில் ஆறு தேவாலயங்களுள்ளன. பாலைதீவு புனித அந்தோனியார் ஆலயமும் இவர்களால் அடிபிடப்பட்டதாகும்.

### வாழ்க்கை

இலங்கைத்தீவிலே ஒரே மதமும், ஒரே இனமும், ஒரே சாதியும் அமைந்துள்ள ஒரு நாடோ அல்லது ஒரு தீவோ இருக்குமேயாகில் அது இரணைதீவு மாத்திரமேயன்றி வேறில்லை: இங்கு பொலிஸ் நிலையமோ, நீதிஸ்தலமோ, கச்சேரியோ கிடையாது. வீண் போட்டியும், சண்டை சச்சரவுகளும், அடிபிடிகளும் தலைகாட்டுவது மிகவும் அரிதாகும். அங்ஙனம் சில சந்தர்ப்பங்களில் சச்சரவுகளேற்படினும் அதை அங்குள்ள பெரியோர்கள் பஞ்சாயம் பேசி தீர்த்துவைப்பர். பிறநாட்டு மக்களை ஆதரிப்பதிலும், உதவி புரிவதிலும் பெருங் குணம் படைத்தவர்கள். ஆனால் இவர்கள் பிறநாடு செல்வதற்கோ அல்லது பிற சாதியாரோடு சம்பந்தம் செய்வதற்கோ அணுவளவேனும் ஆசையற்றவர்கள். தாமுண்டு, தம் வீடுண்டு, தம் நாடுண்டென்று சீவிக்கும் பழக்கமுள்ளவர்கள்.

### தொழில்

இவர்கள் பூர்வகாலந்தொட்டுக் கடற்தொழிலே செய்து வந்துள்ளார்கள். ஆண்களும் பெண்களும் சோம்பலின்றி எவ்வித தொழிலும் புரியும் ஆற்றல்படைத்தவர்கள். ஆறு மாதகாலம்வரை கடல் தொழிலும், மற்ற ஆறுமாதங்களில் வன்னி நாடுகள் சென்று நெல்லு வெட்டுவதும் காடுகளில் திரிந்து பாலைப்பழங்களை சேகரித்து ஒருவகைப் பாணி செய்வதுமே இவர்களின் பிரதான முயற்சியாகும். இவர்களால் தயாரிக்கப்படும் பாலைப்பாணி, மேல்நாட்டு 'ஜாம்' வகைகளை ஒத்த சுவையுமுள்ளதும், வெகு நாட்கள்வரை பழுதுபடாமல் பாவிக்கக்கூடிய தன்மையுமுள்ளது.

கடல் தொழிலிலும் இவர்கள் மிகவும் வல்லவர்கள். சிறு சிறு வள்ளங்களைக் கொண்டு பெரும்பெரும் சமுத்திரங்களைத் தாண்டி மச்ச வேட்டையாடுவர். மற்றைய நாட்டு மீனவர்களைப் போல் இவர்கள் வலைபோட்டு ஆமைகள் பிடிக்காமல் கடலில் சுழியோடி ஆமைகளின் கால்களிலே கயிற்றுத் தடம்போட்டுப் பிடிக்கும் சாகர வீரர்கள்.

### வட்டக் குடிசையும் மாத் திறவுகோலும்

இரணைதீவு மக்கள் வசித்த குடிசையும், பாவித்த திறவுகோலும் மிகவும் விசித்திரமானது. இக்குடிசைகள் கிணறுகளைப்போன்று வட்ட வடிவமாயமைந்து, அந்த வட்டத்தினுள்ளே சமையல் குசினியும், படுக்கைப் பகுதியும் அமைந்திருக்கும். வட்டத்தைச் சுற்றிச் சரியாகக் கிணற்றுக் கட்டைப்போல் மண்ணினால் சுவர் எழுப்பிக் கட்டப்பட்டிருக்கும். கூரைகள் மிகவும் அழகாகத் தென்னோலை யால் வட்டமாக வேயப்பட்டிருக்கும். இதன் கதவுத்திறவுகோல் மாத்தினால் செய்யப்பட்டதாகும். இவர்கள் வேற்றிடங்களுக்குச் செல்லும்போது கதவுகளைப்பூட்டி அத்திறவுகோலை வேலி ஓரங்களில் நிற்கும் பூவரசமரத்திலே ஒழித்து வைத்துச் செல்வர். இவ்வலகையாகவே இவர்களின் குடிசையும் திறவுகோலும் அமைந்திருந்தனவாம். தற்போது இரணைதீவில் வட்ட வடிவ வீடுகளும் மாத் திறவுகோலும் இல்லாதுபோயினும், இக்குடிசையில் வசித்தவர்களும், திறவுகோலைப் பாவித்தவர்களும் சாட்சியம்பகர இன்றும் சீவித்து வருகிறார்கள்.

### வண. மொறே சுவாமியாரும் தற்கால நிலையும்

இத்தீவு மக்களின் சமயப் பணிபுரிவதற்காக யாழ்ப்பாண மேற்றிராணியாரால் வண. மொறே சுவாமியார் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவ்வடிகளார் சுமார் 30 வருடங்களுக்குமேலாக அங்கு தொண்டாற்றி வருகிறார். இவர் இரணைதீவுக்கு வந்த பிற்பாடு அவ்வூர் மக்களுக்குச் சமய வழியில் மாத்திரமல்ல, சமூகத்துறையிலும் அநேகம் தொண்டாற்றியுள்ளார். ஆலய விஸ்தரிப்பு, பாடசாலை, அரசினர் வைத்தியசாலை, குடிதண்ணீர், சங்கக்கடை, கிராமச்சங்கம் முதலாம அரும்பெரும் பணிகள் யாவும் இவரது முயற்சியாலேயே நடைபெற்றிருக்கிறது. அநேக மாணவ மாணவிகளைத் தன் சொந்தப்பொறுப்பில் பிறவூர்களுக்கனுப்பிக் கல்வி பயிற்றுவித்துள்ளார். இவரது சலுகையாலும் ஊக்கத்தாலும கல்விபயின்ற திரு. செபமாலை என்பவர் ஓர் ஆசிரியராகவும், திருமதி சுவாணு என்னும் பெண்மணி இரணைதீவு உப தபால் நிலையப் பொறுப்பாளியாகவும் இன்னுமொரு மாணவன் கண்டிக் குருமடத்தில் குருமாணவனாகவும் திகழுகின்றார்கள். இன்னும் தன் சொந்த முயற்சியாலும், ஊக்கத்தாலும் இளவாலை கன்னியர் மடத்தில் கலைபயின்று, தராதரப் பரீட்சையிலும், தையல் கைப்பணியிலும சித்திபெற்ற செல்வி அமிர்தம் செல்வராணி அரசாங்க சமூக சேவைப்பகுதியில் இரணைதீவில் கடமையாற்றுகின்றார். இவ்வுத்தமி தனது ஓய்வுநேரங்களில தன் தீவின் முன்னேற்றங் கருதிக் கன்னியர்களை ஒருங்குசேர்த்துத் தையலும் கைப்பணிகளும் கற்பித்துவருகின்றார். இன்னும் இரணைதீவின் முன்னேற்றத்திற்காக நெடுந்தீவு சுப்பிரமணியம் விதானையாரும், அவரது மகன் மார்க்கண்டுவும் அநேகம் தொண்டுகள் புரிந்துவருகின்றார்கள். இவர்களின் முயற்சியினாலேயே சுமார் 25 வருடங்களுக்குமுன் பனைமரங்கள் உண்டாக்கப்பட்டதும், குதிரைகள் வளர்க்கப்பட்டதும், கால்நடைகளுக்காக இரு கேணிகள் தோண்டுவிக்கப்பட்டதுமாம். தற்போது முற்காலத்திலும்பார்க்க இரணைதீவு சொற்ப முன்னேற்றம் பெற்றுள்ளது.

[நன்றி: ஈழநாடு]

## மரண அறிக்கை

ஆனைக்கோட்டைவாசரும், அரசினர் சிறைமுகாமில் 17 வருடகாலமாகக் கடமையாற்றி இளைப்பாறியவரும் பின்னர் யாழ் மேற்றிராசனஇல்ல வாயில்காப்போராகக் கடந்த 30வருட காலமாகப் பணிபுரிந்து வந்தவருமான திரு. சந்தியாப்பிள்ளை சுவாம்பிள்ளை அவர்கள் தமது 75ஆம் பராயத்தில் சென்ற 16-2-70 திங்கட்கிழமை தமதில்லத்தில் காலமானார். இவருக்கு புதல்வர் ஒருவரும், நான்கு புதல்விகளும் உளர்.

எதிர்பாராத மரணத்திரையில் மறைந்த இவரது சடலத்தைப் பல குருமார், பெரியோர், மற்றும் உடனுழிய அன்பர்கள் பலரும் தரிசித்துத் தமது இறுதி அஞ்சலி செய்தனின்றார்கள்.

மறுநாள் இவரது சடலமானது பி. ப. 4-30 மணியளவில் பெருந்திரளான இனசனர், அன்பர்கள் மத்தியில் அழகிய பேழையில் வைக்கப்பெற்று மோட்டோரதருடாக ஊர்வலம் பரி. அடைக்கலமாதா ஆலயம் அடைந்ததும், பங்குக்குரவர் வண. ஜி. சி.மேரியோசவ் அவர்கள் அந்திம சடங்குகள் நிறைவேற்றியதும், பின்னர் ஆனைக்கோட்டை சேமக்காலை கொண்டுசென்று நல்லடக்கம் செய்யப்பட்டது. இவரை இழந்து துயருறும் மனைவியர் மக்கள், பேரர், மற்றும் இனசனருடன் நாமும் அனுதாபப்படுகிறோம். ஆன்மா சாந்தியுறுக.

✠

### அகஸ்ரீன் கிறிஸ்தோப்பர்

அவர்களின்

**3-ம் வருட மரணஞாபகம்**

பிறப்பு: 17—4—1903 இறப்பு: 28—2—1967

"சீவியத்தில் இவரை நேசித்தவர்களே, மரணத்திலும் மறவாதீர்கள்."

இதைக் கண்ணுறும் அனைவரும் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம். இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 28-ந்தேதி சனிக்கிழமை காலை 6-15மணிக்கு யாழ்ப்பாணம்ஆசனக்கோவிலில் ஒரு துக்கப் பாடற்பூசை நிறைவேறும்.

மனைவி: எலிசபெத் பூரணம் கிறிஸ்தோப்பரும், மக்களும்.

யாழ்ப்பாணம்.

## இலங்கையின் பூர்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற விசித்திரநூலை அந்தக் காலத்தில் எவருமே அறிந்திருக்கவில்லை. இதன் கையெழுத்துப் பிரதிகள் வத்திக்கான் தொல்பொருள் சுவடிக்கூடத்தில் இருந்தன. நீண்டகாலத்தின் பின்னரே இவைகள் சரித்திர ஆராய்ச்சியாளர்களின் கைக்குக் கிட்டின. ஆசீர்வாதப்பர் சபையைச் சேர்ந்த ஒருவரால கிரேக்கமொழியில் முதன்முதலாக இந்நூல் வெளியிடப்பட்டது. இது தற்போது அநேக மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது.

[வளரும்]

## உருளு... உ...

### கடவுளை நம்பியிருக்கி...

அமெரிக்காவின் ... களில் 1864 முதல், ... நம்பியிருக்கிறோம் என்... கியம் பொறிக்கப்பட்டு... கின்றது. நாணயங்க... மட்டுமல்ல, நோட்டுகளி... இவ்வாக்கியங்கள் பொற்... பட வேண்டுமென்ற ஆ... சனையை 1955-இல் அமெ... கச் சட்டமன்றம் சட்டமா... கொண்டுவந்தது.

### ஆம்ஸ்டிராங் கோழிக்குஞ்சு

இங்கிலாந்து நாட்டில் எ... கா வாலஸ்என்ற பெண் கோழி முட்டையைத் தன் நெஞ்சில வைத்து 3 வாரங்கள் அடைகாத்துக் குஞ்சு பொரிக்கச்செய்தாள். அதற்குச் சந்திரனில் முதன் முதல் காலடி வைத்த ஆம்ஸ்டிராங்கின் பெயரை வைத்திருக்கிறாள்.

### வைர மோதிரத்தின் விலை 3கோடி ரூபாய்

69 காரட் மதிப்புள்ள வைரக்கல் பதித்த மோதிரம ஒன்று 2 கோடியே 10லட்சம் ரூபாய்க்கு ஏலத்திற்குப் போயிற்று. ஆங்கில நடிகை எலிசபேத் டெய்லர் அதை வாங்கித் தருமாறு தன் கணவனை வற்புறுத்தவே, அவர் ஏலத்தில் எடுத்த கார்டியர் என்பவரைச் சந்தித்து 3கோடி ரூபாய் கொடுத்து வாங்கி அன்பு மனைவியின் விரலில் அணிவித்தாராம்.

### வைரபூகோள உருண்டை

ஈரானின் அரண்மனையில் 2 அடி சுற்றளவுள்ள விலையுயர்ந்த பூகோள உருண்டை ஒன்று இருக்கிறதாம. அதில கண்டங்களைப் பிரித்துக் காட்ட வைரம், வைடூரியம, கெம்பு, நீலம் போன்ற விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த உலக உருண்டைத்தாங்கி வைரத்தால் இழைக்கப்பட்டிருக்கிறது. இதில 51366 சற்றுகள் உள்ளனவாம். இதில் ஈரானைக்குறிக்க அதன் தேசிய ரத்தினமான வைடூரியமும், இங்கிலாந்து பிரான்ஸைக் குறிக்க வைரமும், பாரதத்துக்குப் பதுமராகமும், ஆபிரிக்காவுக்குக் கெம்புகளும் இழைக்கப்பட்டிருக்கின்றன.

### சலவைக்கல் கம்பளம்

ஜார்ஜியாவில்உள்ள பழைய கோவில் ஒன்றைச் செப்பனிடுவதற்குத் தோண்டி... கள். அதன அடியில் 1500 ஆண்டுகளுக்கு முற்பட்ட சலவைக்கல் கம்பளம் ஒன்று கிடைத்ததாம். இதில் சதுர மீற்றர் ஒன்றுக்கு இருபதினாயிரம் சதுரக்கற்கள் இருக்கின்றனவாம். இவை 12 வருணங்களில் காட்சியளிக்கின்றனவாம். இதன் பரப்பளவு சுமார் $60m^2$ என்று கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வழிபாட்டின் நாள்காட்டி**
**1970 — பங்குனி மாதம்**

| | | |
|---|---|---|
| யிறு | தபசுகால 3-ம் ஞாயிறு | [ஊ] |
| ங்கள் | தினப் பூசை | [ஊ] |
| சவ்வாய் | ,, | [ஊ] |
| புதன் | ,, | [ஊ] |
| வியாழன் | ,, | [ஊ] |
| வெள்ளி | ,, | [ஊ] |
| சனி | ,, | [ஊ] |

சத்தியவேத பாதுகாவலன்

# தவ வாழ்வு

தவம் இன்று அவசியமற்றதாகப் போய்விட்டதா? ருச்சபையின் கற்பனைப்படி தற்போது உபவாசநாட்கள் வருடத்தில் இரண்டேயிரண்டுதான். மாமிசத் தவிர்ப்பு இருக்கிறதோ இல்லையோ என்னும் நிலையில் உள்ளது. மற்றப்படி எந்தவிதமான தவமும் கட்டாயக் கடனாக விதிக்கப்படவுமில்லை. இவற்றைத் தவருக விளங்கிக்கொள்பவர்களும், தமது சொகுசான வாழ்வுக்குக் குந்தகம் விளையாதபடிக்கு வேண்டுமென்றே தப்பர்த்தம் கொடுப்போரும் ஏராளமாக இருக்கின்றனர். அவர்களுக்கு இவையெல்லாம் வெறும் இளக்காரமாய்த்தான்தோன்றுகின்றன. தனது கற்பனைகளைக் கட்டாயமாய் அமுல் நடத்த முடியாத திருச்சபை அவற்றை விட்டுக்கொடுக்கிற தென்றும், மக்களுக்கு அக்கற்பனைகளை அனுசரிப்பது கஷ்டமாக இருக்கிறதென்று திருச்சபை அவ்வற்றை ரத்துச்செய்த தென்றும் கருதுவது தவறு. திருச்சபை அக்கற்பனைகளை நீக்கியது அவை கஷ்டமாய்ப் போய்விட்டன என்பதனாலன்று; அவை மிகவும் சுலபமாகி, வெறும் சடங்காசாரமாக, அர்த்தமற்றதாக ஆகிவிட்டன என்பதால்தான். அவற்றுக்குப்பதிலாக வேறு தவக்கிருத்தியங்களை வற்புறுத்தியிருக்கலாம். ஆனால், திருச்சபையின் இன்றைய போக்குக்கு அது விரோதமானது. இது பொதுநிலையினரின் காலம். பொதுநிலையினர் வளர்ச்சியடைந்த கிறிஸ்தவர் என உணர்ந்து தத்தமக்குரிய தவமுயற்சியைத் தாமே தேர்ந்தெடுத்து அனுசரிக்கும் பொறுப்பைத் திருச்சபை அவர்களுக்கே அளித்திருக்கிறது. ஒருவருக்குக் கஷ்டமாக இருப்பது மற்றொருவருக்குச் சுலபமாக இருக்கக்கூடும். ஆகவேதான் ஒரேவிதமான தவம் சகலருக்கும் பொருந்தாததாகின்றது. மேலும் தவமானது பயத்தினாலன்றி அன்பின் காரணமாக மேற்கொள்ளப்படுவதே சிறந்ததாகும். ஒரு காரியம் பாவம் என்றதனால் அதை விலக்குவதைவிட, அது ஒரு புண்ணியம் என்றதனால் அதை விரும்பிச் செய்தலே மேலானதாகும்.

இதற்கு ஒவ்வொருவரும் ஒரு தவக்கால வாக்குத்தத்தத்தைச் செய்துகொள்வது உபயோகமாயிருக்கும். உணவில் எளிமையைக் கடைப்பிடிப்பது, படக்காட்சி முதலிய உல்லாசப் பொழுதுபோக்குகளைத் தவிர்ப்பது, மது அருந்துதல் போன்ற ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பது முதலிய பல ஒறுத்தல்களால் மீதப்படும் பணத்தைத் தானதருமங்களில் செலவிடலாம். பொழுதுபோக்கு நாவல்கள், பயனற்ற செய்திகள் வாசிப்பதை நிறுத்தி அந்நேரங்களில் ஞான வாசினைகளை, விசேஷமாக வேதாகமத்தை வாசிக்கலாம். திருவழிபாடுகளில் தினந்தோறும் பங்குபற்றுவதும், சிலுவைப்பாதை முதலிய தியானங்களைச் செய்வதும் பயனுள்ள தவமாகும்.

தவம் கிறிஸ்தவ வாழ்வில் அத்தியாவசியமென்பதைப் புதிய ஏற்பாடும் அப்போஸ்தலர் வரலாறும் உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெளிவாக உணர்த்துகின்றன. கிறிஸ்துநாதர் நாற்பதுநாள் கடுந்தவம் புரிந்தார் என்பதும், தாம் பரலோகத்துக்கு எடுக்கப்பட்டபின் தமது சீடர் தவம் செய்வர் என்று அவர் கூறியதும், அவரது ஏனைய உப்தேசங்களும் தவத்தை வலியுறுத்துகின்றன. கிறிஸ்துநாதரின் பாடுகளில் அவரது சீடரும் பங்குகொள்ள வேண்டியவர்கள் என்பதை அப்போஸ்தலர் மீண்டும் பலமுறை வற்புறுத்தியிருக்கிறார்கள். பழைய ஏற்பாட்டுக் காலம் தொட்டுக் கடைப்பிடிக்கப்பட்டுவரும் தவம் இன்று அர்த்தமற்றுப் போய்விடவில்லை. உலகமானது இன்பத்தில் மூழ்கிச் சொகுசாக வாழ எண்ணும் இக்காலத்தில் இது முன்னையை விடக் கூடிய முக்கியத்துவமுடையதாய் இருக்கின்றது.

# சிலுவையின் பாதை

இன்று ஒவ்வொரு கத்தோலிக்க தேவாலயங்களிலும், சுவர்களை பதினான்கு சிலுவைப்பாதைப்படங்கள் அலங்கரிக்கக் காணலாம். யேசு பெருமானின் இறுதி நிகழ்ச்சியான இரட்சணியப்பலியின் பிரதான அம்சங்களிலொன்றுன அந்தோனியா கோட்டையிலிருந்து கல்வாரி மேடு வரை நடந்த சம்பவங்களை இப்பதினான்கு படங்களும் எமக்கு நினைவுறுத்துகின்றன.

ஒரு கட்டிடத்தை அல்லது மாளிகையை அலங்கரிப்பதற்காக தொங்கவிடப்படும் சுவரோவியங்கள் அல்ல இந்தப் படங்கள். இரண்டாயிரம் வருடங்கட்கு முன்னர் கிறிஸ்துபெருமான் உலகோரின் பாவக்கறையால் மூடப்பட்ட மோட்ச கபாடத்தை மீண்டும் திறக்க தம்மையே பலியாகத் தந்த தியாகநிகழ்ச்சியை சித்திரிப்பதுடன் நாமும் அந்தப்பாதையில் மனேபாவனையாகச் செல்லவேண்டும் என்பதை எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கும் நினைவுத்தம்பங்கள் இவைகள்.

— சாமுவேல் பெனடிக்ற் —

கிறிஸ்துவின் வியாகுலப் பாதையை நினைவுறுத்தும் இந்தச் சிலுவைப்பாதை முயற்சி கத்தோலிக்கர்களால் பெருமளவில் கைவிடப்பட்டு வருவது விசனத்துக்குரியதாகும். எனினும் தபசுகாலத்திலாவது சிலர் இந்த அரிய முயற்சியை அனுசரித்துவருவர்.

சிலுவைப்பாதை எவ்விதம் தொடக்கப்பட்டது? அதன் தொடக்க காலம் எது என்ற வினாக்கள் இவ்வரிய தவமுயற்சியை அனுசரிப்போரின் மனதில் எழுவது சகஜம். நன்கு ஆராய்ந்து பார்க்குமிடத்து இக்காலத்தில் எவ்விதம் ஞாயிற்றுக்கிழமைகளில் குருவானவரின் தலைமையில் சிலுவைப்பாதை முயற்சியை நடாத்துகிறோமோ அவ்விதமே தேவஅன்னையின் தலைமையிலேயே அக்காலத்தில் சிலுவைப்பாதை ஆரம்பிக்கப்பட்டது என்பதை உறுதியாகச் சொல்லலாம்.

யேசுபெருமானுக்கு மரணத்தீர்வையிடப்பட்டுவிட்டது என்ற செய்தியை அவரின் பிரியாநண்பர் அருளப்பர் அறிந்ததும் ஓடோடிவந்து கன்னிமரியாளுக்குத் தெரிவித்தார். தன் தேவபுதல்வனை பலிப்பொருளாகத் தியாகம் பண்ணவேண்டியதோர் காலம் வரும் என எதிர்பார்த்திருந்த அப்புனிதையும் அத்தருணம் அணமிவிட்டது என்பதை உணர்ந்தவராக முப்பதுவருட காலம் மிக்கபரிவோடு வளர்த்த தன்பிரியமகனுரின் இறுதித் துயரங்களில் பங்குகொள்ள வேண்டி அந்தோனியா கோட்டையண்டை தீவிரித்துச் சென்றிருப்பார்.

கிறிஸ்துவின் போதனை சாதனைகளால் கவரப்பட்டு அவரின் பாதசேவை செய்வதையே தம் இலட்சியமாகக் கொண்டிருந்த மார்த்தா, மதலேனாள் முதலிய சில நங்கையரும் அவரையும் அருளப்பரையும் பின்தொடர்ந்திருப்பர். கிறிஸ்துவின் தோளிலே சிலுவையைச் சுமத்தி அவரை கல்வாரி மேட்டுக்கு செல்லும் பாதையில் இழுத்துச் செல்கின்றார்கள் என்பதையறிந்து கிறிஸ்துவை இறுதிமுறையாக நேர்முகமாக மரியாள் தரிசிக்கட்டும் என்றெண்ணிய அருளப்பர் குறுக்குப்பாதைகளினூடாக மரியாளை கொண்டு சென்று சந்திக்கவைத்திருக்கலாம். அவ்விடத்திலிருந்து அடக்கம்வரை மரியாளும் மற்றையோரும் திருமீட்பரைத்தொடர்ந்து சென்றனர். அவரின் வியாகுலத்தில் பங்கு கொண்டனர்.

எனவே சிலுவைப்பாதைப் பக்தி இற்றைக்குச் சுமார் 1933 வருடங்கட்கு முன்னர் தொடக்கப்பட்டது என்றால் அதில் தவறில்லையல்லவா? கிறிஸ்து பரலோகம் சென்ற பின்னால் அவரின் அடியார்கள் கிறிஸ்துவின் திருப்பாடுகளைத் தியானித்து, திருப்பாடுகளின் பிரதான நிகழ்ச்சிகள் நடைபெற்ற இடங்களைத் தரிசித்து, பிரார்த்திக்கும் வழக்கத்தை மேற்கொண்டனரென்று பாரம்பரியங்கள் தெரிவிக்கின்றன.

பின்னர் புறஜாதியினரும் கிறிஸ்தவத்தின் எதிரிகளும் பல படையெழுச்சிகளை பலஸ்தீனுமீது மேற்கொண்டு திருப்பாடுகளின் புனித தலங்களின் முக்கியத்துவத்தை சிதைக்க முயற்சித்தனர். சிலுவையுத்தங்கள் இவர்களது முயற்சிகட்கு எதிரிடையாக அமைந்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

புங்குடுதீவுப் பங்குக் குரவரான வண. ஜே. ஸ்பம்பதி சுவாமியாரின் தந்தையார் இம்மாதம் 21-ம் தேதி சனிக்கிழமை பிரான்ஸ் தேசத்தில் காலமாயினுர். இவரது ஆன்ம சாந்திக்காக வேண்டிக்கொள்ளுமாறு சுவாமியவர்கள் எல்லோரையும் தயவாகக் கேட்டுக் கொள்ளுகின்றார்.

## நீசன் நான்

விடிந்தது புதுநாள் வழமைபோல் அன்று
ஒளியின் மலர்ச்சியில் உயிர்தான் எங்கே?
மலர்கள், நறுமணம், தென்றல், இன்னிசை
இளர்ச்சியை ஊட்ட மறந்தன ; ஏதோ
உணர்ச்சியை வாட்ட உறக்கம் தெளிந்தேன்
சிரிப்பிலே தங்கம் சிந்தும் குழந்தை
தவழும் மனையில் தங்கும் மகிழ்வு
நெஞ்சிற் புகுந்து நீந்த மறுத்தது.
தோற்றின யாவும் துயரம் உரைத்தன.
எழுந்தேன் ; இருந்தேன் ; நடந்தேன் ; அன்றும்
சங்கிலித் தொடர்போல் முடிந்தன கடன்கள்.
துயரச் சலனமோ அலையாய்த் தொடர்ந்தது.
ஏனோ? ஒருதிகில் என்னை வதைத்தது
மனமும் கண்களும் இருண்டன மைபோல்
மரணம், மரணமா? ஆமாம் மரணந்தான்
நினைவில் மரணமே நிழலாடியது
இந்த நினைவு எப்படி வந்ததோ?
"இன்று நீ இறந்தால்" எங்கோ ஒருகுரல்
நெஞ்சைத் தொட்டது; நெருப்பாய்ச் சுட்டது
ஏக்கம், அழுகுரல், தவிப்பு, கண்ணீர்
வாழ்வு, பிரிவு, உறவு, முடிவு
எண்ணத் தொலையா எண்ணக் கடல்கள்
நினைவிற் பொங்கி நின்று குமுறின
உளப்பகை வென்ற உரங்கொள் வீரன்
மரணத்தை மாணிக்க மாலையாய் ஏற்பான்;
அன்பில் விளைந்த அறத்தின் நெஞ்சம்
துன்பச் சாவைத் துரும்பாய் மதிக்கும்.
மாசற்ற குழந்தைக்கு மரணப் பயமேன்?
நீசன் நான் ..................

யாழ். "ஜெயம்"

காவலனுக்கு கதைகள், கவிதைகள், கட்டுரைகள் அனுப்பவேண்டிய விலாசம்:

ஆசிரியர். 'காவலன்',
மேற்றிராசன இல்லம்,
த. பெ. என் 2,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1970 ஆம் ஆ மாசிமீ 28ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org